بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பததிராதிபா — கூ அ அபதுல மஜீத

வாலயூம 4	1927ஹு பிபரவரிமீ	பகுதி 2

அலலாஹுத ஆலாவின நடபும, இஸ்லாம மாாககமும

(மௌலானா ஸையத சுலைமான நதவி அவாகள எழுதுகிறாாகள)

கிறிஸதவ பிரசாரகாகளும மேலநாடு கீழநாடு ஆகிய தேயத தவாகளும இறுமாபபு அகமபெருமை, குறைகூறல ஆகியவைகளைக கொணடு இஸலாம மாாககததைததாககி வருகினறனா அவாகள இஸலாம மாாககம தனனகததினருககு அலலாஹுதஆலா மகா ஆஙகாரததை யுடையவன அடககி யரசாடசிச செயபவன மகா தததுவஙகளையுடைய ராஜ சகரவாததியானவன என அறிவிக்கிறது ஆகவே அமமாாககததவாகள தஙகள நாயனை எபபொழுதும மிகபபயநது நடுநடுஙகினவாகளாகவே இருககவேணடு மெனபது இஸலாம மாாககததின எலலா சடடதிடடஙகளிலும மிகைத திருககினறன எனறு பறை சாறறுகினறனா கிறிஸது மாாககம அபபடியனறு அது தனனகததினருககு தநநாயன மிகபபிரியமுடையவன மிககததயாளன அனபின வதனததோடுப பிரகாசிககினறான ஆகவே அவனை பிதாவெனறு அழைககினறாாகள அககாரணம பறறியே அதன எலலாபோதனைகளிலும கிருபை, சாநதம,

பட்சம் ஆகியவைகளை மிகசேமித்திருக்கின்றன என்று அறிவிக்கின்றார்கள்.

இஸ்லாம் மார்க்கத்தின் எல்லா சட்டதிட்டங்களிலும், அதன் நாயன் மகா ஆங்காரம், மிகக்கோபம், அடக்கி யரசாட்சி செய்வது ஆகியவைகளை யுடையவனென்று அறிவிக்கிறதனுல், இஸ்லாம் மார்க்கம் யுத்தாவேச முடையது. புகஹாக்கள் அல்லாஹுதஆலாவிற்கு வழிபட்டுநடக்கவேண்டும்; அவனுக்குப்பயப்பட வேண்டுமென்று அறிவித்ததன் மூலமாய், இஸ்லாமுக் கேற்பட்டிருந்த ஓர் குறைவை ஞானம் (தஸௌவ்பு) நீக்கி அல்லாஹுதஆலா கிருபை, நட்பு ஆகியவைகளையுடையவன் என அறிவித்ததென்று கீழ்நாட்டினர் கூறுகின்ருர்கள்.

இஸ்லாமின் நண்பரல்லாதவர்கள், இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி தர்க்கம் செய்யப்புகுமுன், கீழ்காணும் சில பாராக்களை யெப்பொழுதும், நன்கு நோட்டமிட்டு ஓர்ந்து, ஆய்ந்து பார்க்கவேண்டும். அஃதாவது:—

இஸ்லாம் மார்க்கம் சாதாரணமாக கூட்டத்தையும், மனோயெண்ணத்தையுமட்டுமுடைய மார்க்கமன்று. ஆனல், அது இவ்வுலகில் அனுஷ்டான முறைகளோடுங்கூடிய மார்க்கமாகும். உலகில் கோடிக் கணக்கான மாந்தர்கள் இருக்கின்றனர். ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஆயிரக்கணக்கான வேலைகளிருக்கின்றன. மனிதர்களின் ஒவ்வோர் கருமமும் மற்றவர்களோடு சம்மந்தப்பட் டிருக்கிறது. ஆகவே, அவ்விருவர்களும் ஒருவரோடொருவர் சம்பந்தப்பட வேண்டும்; ஒருவர் மற்றவருக்கு வழிபடவேண்டும்; ஒருவரின் வழியை மற்றவருக்கு விட்டுக் கொடுக்கவேண்டும். நட்பு, பயம் ஆகிய இவ்விரண்டும் மிகைப்படுவதனுலயே ஒருவருக் கொருவர் அடிபணிதல், நட்பு ஆகியவைகள் உண்டாகிறது. இவ்விரண்டையும், பிரயோஜனத்தின் புறம் "அபேட்சை" யும், கஷ்டத்தின் புறம் "வெறுப்பு" ம் உண்டாகிறதென்று வேறு சொற்களால் அழைக்கப்படுகின்றன.

மக்கட்களின் எல்லாவித நடவடிக்கைகளும் நட்பு, பயம், நன்மையின் பக்கம் அபேட்சை, கெடுதியின் பக்கம் வெறுப்பு ஆகியவைகளையே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின்றன. அல்லாஹுதஆலாவைப் பற்றியும், மனிதர்களுடைய ஆலோசனையின் சம்பந்தங்களும் அவ்வசலையே கொண்டிருக்கின்றது. யாதுமறியா பாமரர்களின் மார்க்க சம்பந்தமான யெண்ணங்களை நோட்டமிடுமிடத்து, அவர்களும் மேற்கூறியபடியே, கண்ணிற்குக் காணப்படும் வஸ்த்துகளில்

எவைத் தங்களுக்கு கெடுதியை யுண்டு பண்ணுமோ? அதற்குப் பயந்தும், அதன் கெடுதியைவிட்டு நீங்கிக் கொள்ளும் பொருட்டும் அதை வணங்குகிறார்கள். எவைத் தங்களுக்கு நன்மை யளிப்பனவாக விருக்கின்றனவோ? அதை நேசித்தும், அதன் நன்மையை யடைவதற்காகவும் வணங்குகிறார்கள்.

தற்கால மாந்தர்களின் நிலைமையைக் கவனித்து, பொதுவாய் ஜனங்களின் நடவடிக்கையையும், தொழிலையும் நோட்டமிடுவோம். உலகத்தில் தற்காலமிருந்துவரும் கட்டுப்பாடு நட்பு, அபேட்சை ஆகியவைகளினால் மட்டும் நடைபெறக் கூடுமா? உலகத்தின் கடைவீதி, ராஜாங்கத்தின் நன்றியறிதலுள்ள கூட்டம், சமுகத்தினர்களின் சங்கம், சுஸைட்டி (Society) ஆகியவைகள் நட்பை மட்டும் கொண்டிருக்குமாயின், கட்டுப்பாடான யுலகம் குலைவுற்றுப்போகும். கட்டுப்படுதல், கீழ்படிதல், பயப்படுதல் ஆகியவைகளைமட்டும் கொண்டிருக்கு மானாலும் கட்டுப்பாடான யுலகக்கட்டடம் இடிந்துத் தகர்ந்துவிடும். அஃதேபோல் வெறுப்பு, பொறாமை ஆகியவைகளைக் கொண்டுமட்டும் உலகக்காரியங்கள் நடைபெறுமாயின், இவ்வுலகம் நரகம் போலாகிவிடும். நம் ஜீவிப்பிற்கு அதிஅத்தியாவச்யமான மனோ உல்லாசம், மனச்சாந்தி ஆகியவைகள் உடனே அழிந்து பட்டுப் போய்விடும். ஆகவே, உலகின் கார்மானம், பந்தோபஸ்து ஆகியவைகள் நட்பு, பயம் ஆகிய இரண்டுமில்லாமல் நிலைத்திருக்க முடியாது. மனிதர்களுக்கும் தங்களின் ஒவ்வோர் காரியங்களிலும் அவ்விரண்டும் ஒருங்கே அமைந்திருக்க வேண்டியது அதிமுக்கியமாக விருக்கின்றது.

இஸ்லாம் மார்க்கம் ஆரம்பமாகுமுன் உலகில் அல்லாஹு தஆலாவினால் அருளப்பட்ட பல மார்க்கங்களிருந்தன. அவைகளில் பல பிரிவுகளுண்டாகி "ஸிராதே முஸ்தகீம்" என்னும் சீரான மார்க்கத்தை விட்டும் முற்றும் விலகிவிட்டனர். யூதமதத்தின் சட்ட திட்டங்கள் சிரசு முதற்கொண்டு, பாதம்வரையில் பயம், திடுக்கம் ஆகியவைகளையும், பலவந்தத்தையும் அறிவிக்கும் சொற்களைக் கொண்டதாக விருந்தது. அம்மார்க்கத்தின் நாயனோ படைத்தலைவனாகும். தகப்பன் செய்தக் குற்றத்திற்கு அவனின் மகன், பேரன் ஆகியவர்களிடமிருந்து தண்டனை வாங்கக் கூடியவன் என அறிவித்தது. யூதமதத்தின் வேதத்தில் "நாயன் கிருபை, தயாளம், நட்பு ஆகியவைகளையுடையவனென்று அறிவிக்கும் சொற்கள்அபூருபமாய்க் காணப்பட்டது" கிறிஸ்தவமார்க்கம் யூதமார்க்கத்திற்கு முற்றும் மாற்றமாய், தன்நாயன் அதிதயாளன், கிருபையுள்ளவன்; மிக்க நட்

புடையவன் என்பது போன்ற சொற்களைக் கொண்டு ஆக்கப்பட்டிருந் தது. அதன் "தனிமகனின் தகப்பன்" எல்லா மானிடர்களுக்கும் தகப் பனுகும். அவன் தன் மக்கட்களின் குற்றம், தப்பிதம் ஆகியவைக ளின் பேரில் கோபமடைவதில்லை, ஆனால், அதைப்பற்றி பரிதாபம், அனுதாபம் ஆகியவைகளை யடைகிருன், என எழுதப்பட்டிருக்கிறது.

இவ்விதம் இஸ்லாம் மார்க்கத்திற்கு முன்னுண்டாயிருந்த மார்க் கங்கள் பலவாராகப் பிரிந்து போனதன் காரணமாய் யூதமதம் உலர்ந்து, மதுரமற்றதாகி விட்டது. கிறிஸ்தவ மதமோ, "முழுதும் நனைந்தால் குளிரில்லை" என்ற பழமொழிக் கொப்பாக, அம்மார்க்கத் தினர் பாபம் செய்தால் அதை யம்மார்க்கத்தில், குற்றமில்லை னெச் சொல்லும் நிலைமைக்கு நனைந்து போயிற்று. விபசாரம் செய்த பெண்மகளை யூதமதம் கற்கொண்டடிக்க உத்திரவு விடுகிறது. ஆனல், கிறிஸ்தவமதமோ, விபசாரம் செய்தவளை "யாதும் பாபஞ் செய்யா தவர்களே கற்கொண்டடிக்கலாம்" என கூறுகிறது. யார் யாதும் பாபஞ்செய்யாதவர்களிருக்கிருர்கள்? ஆகையால், "ஓ மாதே! போ. இனி இவ்விதம் செய்யாதே" என்று சொல்லியனுப்பிவிட போதிக் கிறது. ஆனல், இஸ்லாம் மார்க்கமோ, அப்படியன்று. அதைப்பற்றி மிகத்தெளிவாய் அறிவிக்கிறது.

அஃதாவது:—பலவந்தம்படுத்தப் பட்ட வர்கள், பைத்தியக்காரர் கள், ஸ்வாதீன மற்றவர்கள் ஆகியவர்களின் குற்றத்தைத் தள்ளிவிடுகி றது. விவாகமாகா கன்னிப்பெண்ணும், விவாகமாகா ஆண்மகனும் விப சாரம் செய்வார்களாயின், அவர்களைச் சாட்டையால் (100 ஹத்தடி) அடிக்கவுத்திர வளிக்கிறது. விதவையும், கணவனுடைய பெண்மக ளும், தாரமிழந்தவனும், மனைவியுடைய ஆடவனும் விபாசரம் செய் வார்களாயின், இதற்கு முன் இவர்கள் இவ்வித குற்றத்திற்கு ஆளா காதிருக்கும் நிலைமையில் இவர்களைக் கற்கொண்டடிக்க உத்திரவு யளிக்கிறது. கிருஸ்துமதம் எச்சமயத்திலும் விவாகரத் தளிக்க உத் திரவு கொடுப்பதில்லை. ஆனல், இஸ்லாம் மார்க்கமோ, அதைப் பற்றி அதிவிரிவாய் உத்திரவளிக்கிறது. இவ்விதமே பரிசுத்த இஸ்லாம் மற்றெல்லா சட்டதிட்டங்களிலும், யூதமதம், கிறிஸ்துமதம் ஆகிய இவ்விரண்டு மதத்தின் சட்ட திட்டங்களின் நடு நிலைமையைக் கொண் டிருக்கிறது.

பரிசுத்த இஸ்லாம் மார்க்கம் தன் கொள்கையிலும் மேற்கூறிய வாறே நடுநிலைமையை வகித்திருக்கிறது. அது தன்னகத்தினருக்கு அறிவுறுத்துவதாவது:--தன்னுடையநாயன்ஜப்பார்--அடக்கியாசாட் சிசெய்பவன், கஹ்ஹார்—மிகஆங்காரத்தையுடையவன். ரப்புல் அப்

வாஜ்--படைத்தலைவன் என்னும் தத்துவங்களை மட்டும் உடையவனல்லன். அவன் பனீ இஸ்ராயீல்,பனீ இஸ்மாயீல் கூட்டத்தினர்களுக்கு மட்டும் நாயனாக விருக்கவில்லை.அவன் மாந்தர்சரீரமுடையவனல்லன்; மக்கட்களின் தகப்பனாகவும், முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் தகப்பனாகவுமில்லை. அவன் கிருபை, தயாளம், நட்பு ஆகிய குணங்களை மட்டும் கொண்டிருக்க வில்லை. அவன் தன் அடியார்களை யடக்கியரசாட்சி செய்பவனாகவும், தயாளம், கிருபை ஆகியவைகளை யுடையவனாகவும் இருக்கிறான்; அவன் குற்றத்திற்கு பகரம் வாங்குபவனாகவும், கடுந்தண்டனை விதிப்பவனாகவுமிருக்கிறான். அவன் தான் நாடியவர்களுக்கு பிழைப்பொருத்து, தான் நாடிய குற்றவாளியைத் தண்டிக்கிறவனாகவும் இருக்கிறான்; அவன் தன் அடியார்களிடத்து அதிகப் பிரியமுடையவனாகவும் இருக்கிறான். அவர்களுக்கு நஷ்டத்தையும், லாபத்தையும் கொடுப்பது, அவர்களை யழிப்பது, காப்பது ஆகியவைகள் அவனின் உத்திரவிற்குட் பட்டிருக்கிறது. ஆகவே, அடியார்கள் அவனுக்குப் பயப்படவும் வேண்டும்; அவனிடத்தில் நட்புங் கொள்ள வேண்டும்.

யாதொரு நல்லவஸ்த்து, அழகிய பொருள்களிடத்தில் பிரியம், மோகம் கொள்பவர்களை "நீங்கள் ஏன் அவைகளிடத்தில் எதைமுன்னிட்டு பிரியம், நட்பு ஆகியவைகளைக் கொள்ளுகிறீர்கள்? அதன் எப்பாகம் உங்களுக்கு அழகாய்த்தெரிகிறது? அதன் எந்நன்மையுங்களை மயக்க முறச்செய்கிறது?" எனக்கேட் போமாயின், அவர்கள் எல்லீரும் ஒருமிக்க ஓரே விதமாய் பதிலளிக்க மாட்டார்கள். சிலர் அவைகளின் சிலபாகத்தைப் பற்றிக்கூறுவர்;சிலர் அதன் வேறுபாகத்தின் நன்மையைக் கூறுவார்கள்; மற்றும் சிலர்அதன் நன்மைகளை வேறுவிதமாய் தங்கள் தங்களுக்கு பிரியமானதையே வெளியிடுவார்கள். அவ்விதமே உலகில் பலதரப்பட்ட நபிமார்கள் தோன்றினார்கள். அவர்களில் ஹஜ்ரத் நூஹ் அலைஹிஸ்ஸலாம், ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் போன்றவர்களின் தோற்றத்திற்கு அல்லாஹுத ஆலாவின் மேன்மை, சக்தி, பெருமை ஆகியவைகள் தோன்றியதனால், அவர்கள் அல்லாஹுத ஆலாவினிடத்தில் பயப்படுதல், அடிபணிதல் ஆகியவைகளைத் தன் உம்மத்தோர்க்குக் கற்பித்தார்கள். ஹஜ்ரத் எஹ்யா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம், ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் போன்றவர்கள் அல்லாஹுத ஆலாவின் கிருபை, கருணை ஆகியவைகளில் மூழ்கியிருந்ததனால், அவர்கள் அல்லாஹுத ஆலா மிக்க நட்பு, அன்பு ஆகியவைகளை யுடையவனென்று தன் உம்மத்தோர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

எங்கள் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்கள், நபிமார்களின் தொடர்பில் அதிவிஷேச ஒளியாதியு டன், எல்லாவித நிரப்பூர்ணமான சக்தி, அதிகாரம் ஆகியவைக ளோடு இவ்வுலகில் தோன்றலானார்கள். ஒரு புறத்தில் அவர்களின் பரிசுத்த நேத்திரங்கள் அல்லாஹுத ஆலாவின் பயத்தைக்கொண்டு முத்துமாலையைப் போல் சாரஞ்சாரமாகக் கண்ணீர் வடிந்தது. மறு புறம் அவர்களின் துய்யஹிருதயம் அல்லாஹுத ஆலாவின் நட்பு, கிருபை,தயாளம் ஆகியவைகளைக் கொண்டு, அதியுல்லாச மடைந்தது. சிற்சில சமயங்களில் அவைகளிரண்டும் ஒருங்கே அவர்களிடம் காணப் படும். என் பெற்றோர்களைக் காணிக்கையாகத் தத்தஞ் செய்வதற்கு முற்றும் தகுதிவாய்ந்த, நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைவஸல்லம் அவர்கள் இரவு காலங்களில் அல்லாஹுத ஆலாவின் நட்பு கிருபை, தயாளம் ஆகியவைகளையும், அவனின் பயம், திடுக்கம், போன்றவைகளையும் ஒருங்கே நோட்டமிட்டு, அதில் மூழ்கிய வர்களாய் தொழுகுவதற்காக நின்று விடுவார்கள். அத்தொழுகை யில் “குர்ஆன் ஷரீபின்” நீளநீளமான அத்தியாயங் (ஸூரத்து) களைத் தங்கள் பரிசுத்த நாவினால் ஓதுவார்கள். அவர்கள் அவ்விதம் ஓதும்போது, அவ்வத்தியாயங்களில்அல்லாஹுத ஆலாவின் ஆங்கா ரத்தையும், சக்திகளையும், அவனுக்குப் பயப்படுவதையும் அறிவிக் கும் ஆயத்துகள் வரும்போழ்து, அதைவிட்டுந் தன்னைக்காத்துக் கொள்ளும்படியாய் அல்லாஹுத ஆலாவிடத்தில் கார்மானந் தேடு வார்கள். அதில் அல்லாஹுத ஆலாவின் நட்பு, முஹப்பத்து, பிரி யம், கிருபை, தயாளம் ஆகியவைகளை யறிவிக்கும் ஆயத்துகள் வரும் போழ்து, அவைகளைத் தனக்குத் தந்தருள் புரியும்படியாய் அல்லா ஹுத ஆலா இடத்தில் துஆச் செய்வார்கள். (முஸ்நத் இப்னு ஹம் பல் 2-ம் பாகம், 93-ம் பக்கம்)

இஸ்லாம் மார்க்கம் மாந்தர்களை நட்பு, பிரியம் ஆகியவைகளுக் கும், பயம், திடுக்கம் ஆகியவைகளுக்கு மிடையிலுள்ள ராஜப்பாட் டையில் நடந்துச் செல்ல அழைக்கின்றது. ஆகவே, ஈமானின் நிரப்பம் பயத்திற்கும், ஆதரவிற்கும் இடையிலிருக்கிறது. அல்லா ஹுத ஆலாவிற்கு வெறும் பயப்படுதலைக் கொண்டு மட்டும் ஈமான் பூரணமாகிறதில்லை. அதைப்போலவே அல்லாஹுத ஆலாவிடத் தில் வெறும் நட்பு, ஆதரவு ஆகியவைகளைக் கொண்டிருப்பதைக் கொண்டு மட்டும் ஈமான் நிரப்பமாகுவதில்லை என அறிவிக்கிறது. உலகின் எல்லாக் காரியங்களையும் நோட்டமிடுவோமாயின் நன்கு புல னாகும். உதாரணமாய் :— ஓர் பணியாளன் தன் எஜமானன் இட்ட

வேலையை "நாம் நன்றாய் செய்தால் நம் எஜமானன் நம்பேரில் பிரியமுற்று, அதிகச் சம்பளமளிப்பார், என மேலெண்ணம் கொள்ளுகிறதுடன், அவ்வேலையைச் சரியாய் செய்யாவிட்டால் நம்மை தண்டித்து, கஷ்ட முறுத்துவார். ஆகவே, நாம் அதைச் சரியாய் செய்ய வேண்டுமென்று பயமுறுகிறான்." அதுபோலவே, இஸ்லாம் மார்க்கம் "அடியார்கள் தங்கள் நாயனிடத்தில் நட்பும், பயமும் கொண்டிருக்கும்படியாய்" கற்பிக்கிறது. இப்பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்திற்கு முற்றும் முறனாக கிறிஸ்தவ மார்க்கம், யூதமார்க்கம் ஆகியவைகள் ஒன்று வெறும் பயத்தையும், மற்றொன்று சிரசுமுதற், பாதம் வரையில் வெறும் நட்புடையதாகவு மிருக்கின்றது.

கிறிஸ்தவர்கள் தங்களை நாயனுடன் சம்பந்தப் படுத்திக்கொண்டார்கள். அதனால் "தாங்கள் கடவுளின் மக்கள்" என்னும் பட்டத்தைச் சூட்டிக்கொண்டனர். யூதர்களின் சில பிரிவினர் பனீ இஸ்ராயீல்களை கடவுளின் நட்பு, பிரியம் ஆகியவைகளுடையவர்களென்று ஏற்படுத்திக் கொண்டார்கள். ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் கிறிஸ்தவர்கள் கடவுளின் குமாரர் என்பதற்கு எதிரிடையாக, ஹஜ்ரத் உஜைர் அவர்களை யூதர்கள் கடவுளின் குமாரர் என்று அழைக்கின்றனர். பரிசுத்த இஸ்லாம் மார்க்கம் "கடவுளின் குமாரர், மக்கள் என்னும் பதவியை எக் கூட்டத்தினர்களுக்கும், எச் சமூகத்தினருக்கும், எவ் வினத்தினருக்கும் அளிக்கவில்லை. ஆனால், எல்லா மாந்தர்களும் அல்லாஹுத ஆலாவால் படைக்கப்பட்ட அடிமைகளே. அவர்கள் அவனுக்கு அடி பணிந்து வணங்க வேண்டும்" என்ற யுச்சஸ்தானத்தில் அவர்கள் யாபேர்களையும் நிற்பாட்டிவிட்டது.

முஸ்லிம்களுக்கு எதிரிடையாய் யூதர், கிறிஸ்தவர் ஆகியவர்கள் "நாங்கள் கடவுளின் புத்திரர்களாகும், அவனை நாங்கள் நட்புக் கொள்ளுகிறோம்" என்று அறிவிக்கிறார்கள். அதற்கு குர்ஆன் ஷரீபு பதிலளிப்பதாவது:—நீங்கள் அவ்விதமாயின் (கடவுளின் மக்கள்களாயின்) கடவுள் உங்களின் பாபத்திற்கு பகரமாய் உங்களை யேன் வேதனைக்குட்படுத்துகிறான்? (அவன் உங்களின் பாபத்திற்கு தண்டனை விதிப்பதனால்) ஆகையினால், அவனின் மக்கள்கள் என நீங்கள் பகருவது மெய்யானதல்ல. ஆகவே நீங்களும் அவனால் படைக்கப்பட்ட மாந்தர்களைப் போலானவர்களே. (ஸூரத் மாயிதா) மற்றோர் இடத்தில் யூதர்களுக்கு மட்டும் பதிலளிப்பதாவது.—ஓ யூதர்களானவர்களே! எல்லா மாந்தர்களையும் விட்டுவிட்டு, அல்லாஹு

தஆலா உங்களை மட்டும் சொந்தமாக நட்புக் கொள்ளுவதாய் நீங்கள் கூறுவது உண்மையாயின், மௌத் (அல்லாஹுத ஆலாவைச் சந்திக்கிற)தை ஏன் பிரியம் வைக்கிறீர்களில்லை? (ஸூரத் ஜும்ஆ)

இஸ்லாம் மார்க்கம் அல்லாஹுத ஆலாவின் கடல் போன்றதயாளத்தை யாதொரு குடும்பம், யாதொரு சமூகம் ஆகியவைகளுக்குமட்டும் சொந்தப் படுத்தவில்லை. ஆனால், இஸ்லாம் மார்க்கம் அல்லாஹுத ஆலாவின் எல்லையற்ற தயாளத்தில் ஒவ்வொருவரையும் சேர்த்துக் கொண்டது. ஒரு சமயம் ஓர் மனிதர் மஸ்ஜிதே நபவியில் வந்து "ஓ அல்லாஹுத ஆலாவே! எனக்கும், முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும் பிழைப்பொறுத்தருள்" என்று துஆக் கேட்டார். நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அம்மனிதரைப் பார்த்து "நீர் அல்லாஹுத ஆலாவின் எல்லையற்ற கிருபையைக் குறுக்கிவிட்டீர்" எனக் கூறினார்கள் (ஸஹீஹ் புகாரீ கிதாபுல் அதப்) இன்னுமோர் சமயம் ஒரு காட்டரபி மஸ்ஜிதில் வந்து "ஓ நாயனே! என்பேரிலும், நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் பேரிலும் மற்றெவருக்கும் அளித்திராத விதமானக் கிருபையைப் புரிந்தருள்." என்றுக் கேட்டார். நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், அஸ்ஸஹாபியவர்களை நோக்கி "இது மிகவழிகேடானது" என் அறிவித்தார்கள். (அபூதாவுத் கிதாபுல் அதப்)

கிறிஸ்தவமார்க்கத்தினர்கள் தங்களின் நாயனை எதன் நிமித்தம் பிதா வென்று மொழிகின்றனரோ? அவ்விஷயங்களை இஸ்லாம் மிகக்கண்டிப்பாய் தடுக்கிறது. ஆகையினாலேயே, கிறிஸ்தவர்கள் இஸ்லாம் மார்க்கத்தின் நாயன் கிருபை, தயாளம், நட்பு, பிரியம் ஆகியவைகளை யுடையவனல்லன் என தப்பபிப்ராயத்தைப் பரப்பிக் கொண்டிருக் கின்றனர். கடவுள் பிதாவென்றும், மனிதர்கள் அவனின் மக்கள்கள் என்றும் மொழியும் பித்தம் கிறிஸ்தவ சமூகத்தினரை மட்டும் பிடித்திருக்கவில்லை. வேறு சிலக் கூட்டத்தினரும் இத்தப்பான மொழியைக் கூறுவதில் சிக்கிக் கிடக்கின்றனர்.

(தொடரும்.)

சங்கை பொருந்திய அல்லாஹுத ஆலா மனிதர்களை படைத்தது "தின்று பருகி வாழ்ந்திருப்பதற்கு மட்டுமல்ல." ஆனால், அவனை வணங்குவதற்காகவே ஜின்களையும், மனிதர்களையும் படைத்திருக்கிறான் (அல்குர் ஆன்)

மஸ்ஜிதும் ராஜீயப் பிரசங்கமும்.

(40-வது பக்கத் தொடர்ச்சி)

இவ்வாயத்திற்குப் பிறகு உள்ள ஆயத்துகளில் "பைத்துல் முகத்த'ஸுக்குப்பதிலாக கஃபாவை முன்னோக்கித் தொழவேண்டு" மென்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. பைத்துல் முகத்தஸை விட்டு கஃபாவை முன்னோக்கித் தொழுவதைத் தடுத்துக் கொண்டிருந்த, யூதர்களின் துர்க்கிருத்தியத்தை 'அதிபெரும் அநியாயமென்று இவ்வாயத்தின் மூலமாய் அல்லாஹுத ஆலா அறிவித்திருக்கக்கூடும், என்றும் ஹஜ்ரத் இமாம் ராஜீ அவர்கள் வரைந்திருக்கிறார்கள். ("தப்ஸீர் கபீர்" 1: 475). ஆனால், இது அங்கீகரிக்கத் தக்கதல்லவென்பதை யொட்டி, கல்வியறிவுள்ளோர்க்கு நாம் எதையும் கூறவேண்டியதவசியமில்லை.

உண்மையென்னவெனின், இவ்வாயத்து மக்கமாநகரைச் சார்ந்த முஷ்ரிக்குகளைச் சுட்டிக்காட்டுவதாகவே யிருக்கின்றது. குர்ஆன் ஷரீபின் ஒரு வாக்கியம் மற்றொரு வாக்கியத்தின் விரித்துரையாயும், வியாக்கியானமாயுமிருக்கும். இவ்வுயர்வு குர்ஆன் ஷரீபுக்கு மட்டும் உள்ள பிரத்தியேகமான சிறப்பாகும். ஆகவே, குர்ஆன் ஷரீபிலுள்ள இரகசியங்கள், விரித்துரைக்கப்படாத விஷயங்கள், நிச்சயிக்க முடியாதவைகள், மறைந்துகிடைப்பவைகள் ஆகியவைகளை முதன் முதலாக குர்ஆன் ஷரீபின் வாக்கியங்களின் மூலமாகவே விரித்துரைக்கவும், வியாக்யானம் செய்யவும் வேண்டும். இம்முறை குர்ஆன் ஷரீபுக்கு வியாக்கியானம் செய்யவேண்டிய அடிப்படையாகும்.

இவ்வாயத்திற்கு குர்ஆன் ஷரீபானது வேறு இடங்களில் புரியும் விரித்துரையைக் கவனிப்போமாக. "அன்பால்" என்னும் சூராவில் மக்கமாநகரின் முஷ்ரிக்குகளை யொட்டி அறிவிக்கப்பட்டிருப்பதாவது:— "மஸ்ஜிதெ ஹராமில் முஸ்லிம்களைப் பிரவேசிக்க வொட்டாமல் மக்கத்து முஷ்ரிக்குகள் தடுத்துக் கொண்டிருக்கும் நிலைமையில், இதுபோழ்து அவர்களை அல்லாஹுத ஆலா வேதனைக்குட்படுத்தாமலிருக்க வேதேனும் முகாந்தரமுண்டா? அவர்கள், தங்களைத் தாங்களே மஸ்ஜிதெ ஹராமின் பரிபாலனக் கர்த்தாக்களென்று கூறிக்கொள்ளுகின்றனர். ஆனால், உண்மையில் மஸ்ஜிதெ ஹராமின்

முத்த வல்லிகளாக விருக்க அவர்கள் அருகரல்லர். (மேலும்) அல்லாஹுதஆலாவுக்கு மட்டும் பயப்படுகிற முஸ்லிம்களே மஸ்ஜிதெ ஹராமின் முத்த வல்லிகளாக விருக்க உரிமையுள்ளவர்களாகும்.'' (அல்குர் ஆனின் வியாக்கியாளம் 8:34)

இவ்வாயத்தில் மக்கத்து முஷ்ரிக்குகளையே சுட்டிக் காட்டி, அவர்கள் முஸ்லிம்களை மஸ்ஜிதிக்குட் பிரவேசிக்காமல் தடுப்பதாய்த் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றது. இது இஸ்லாமிய ஆரம்பக் காலத்துத் தடையாயிருக்கலாம். அல்லது 'ஹுதைபியா'வின் சமாதானத்திற்குப் பிறகேற்பட்ட தடையா யிருக்கலாம். மற்றோரிடத்தில் அறிவிக்கப்பட் டிருப்பதாவது:— குப்ருக்குட் பட்டோரென்று சாக்ஷி கூறப்படுதற் குரிய துர்க்கிருத்தியங்களைப் புரிவதோடு, "அல்லாஹுத ஆலாவின் மஸ்ஜிதைச் செழிக்கச் செய்ய முஷ்ரிக்குகளுக்கு எவ்வுரிமையும் கிடையாது. இவர்களே தங்களின் சகலகாரியங்களையும் நாசமாக்கிக் கொள்ளுகிறவராகும். முடிவற்ற சிக்ஷை இத்தகையோரைச் சார்ந்ததாகும்.'' (அல்குர் ஆனின் வியாக்யானம். 9 : 18.)

'குப்ரு,' 'ஷிர்க்கு' ஆகியவைகளோடு மஸ்ஜிதின் ஊழியம், சம்மந்தப்பட முடியாதென்று, 9 : 18 அறிவிக்கின்றது. இவ்வாயத்திற்குப் பின்னரிருக்கும் ஆயத்தில் அதிதெளிவாய் அறிவிக்கப்பட்டிருப்பதாவது:—"அல்லாஹுதாலாவின் பேரிலும், உலக முடிவு நாளின் பேரிலும், ஈமான் கொண்டு தொழுகையை நிலைப்படுத்தி ஜகாத்தைக் கொடுப்பதோடு, அல்லாஹுதாலாவைத் தவிர வேறு எதற்கும் அஞ்சாதவரே, உண்மையில் அல்லாஹுதாலாவின் மஸ்ஜிதைச் செழிக்கச் செய்வோராகும்.'' (9:19 அல்குர் ஆனின்வியாக்யானம்.)

மஸ்ஜிதுகள் சம்பந்தமான மற்ற ஆயத்துக்களை வரையும்போது இவ்வாயத்தை மீண்டும் வரைவோம். ஏனெனின் இவ்வாயத்தானது, மிக முக்கியமானதாயும், விரிவாய் விளக்கிக் காட்டத் தக்கதாயுமிருக்கின்றது. ஆனால், மஸ்ஜிதுகளின் பரிபாலனம், மஸ்ஜிதுகளை செழிக்கச் செய்வது ஆகிய நல்லூழியத்தைப் புரிவதற்கு ஈமானும், இஸ்லாமும் இன்றியமையாத நிபந்தனையென்றும், குப்ரைச் சார்ந்த துர்க்கிருத்தியத்தோடு, மஸ்ஜிதின் ஊழியத்தைச் சார்ந்த கௌரவம் சம்பந்தப்படமுடியாதென்றும், அல்லாஹுதஆலா அறிவுறுத்துவதை எடுத்துக்காட்டுவதுமட்டும் இவ்விடத்தில் நம் நோக்கமாகும். மற்றொரு ஆயத்தில் அறிவிக்கப்படுவதாவது:—

"அல்லாஹுத ஆலாவைப் பொறுத்து குபுரைச் செய்ததோடு நீங்கள் மஸ்ஜிதெ ஹராமுக்குட் செல்லாமல் தடுத்

தோர், மக்காவாசிகளே யாகும்.'' (48:52 அல்குர்ஆனின் வியாக்யானம்.)

குர்ஆன் ஷரீபின் இவ்வெல்லா ஆயத்துகளையும் கண்ணுறுவோமாயின் இதர சாக்ஷியங்களின்றியே உண்மை வெளியாகிவிடும்.

(1) குர்ஆன்ஷரீபானது மக்கத்து முஷ்ரிக்குகளைச் சுட்டிக் காட்டி, அவர்கள் முஸ்லிம்களை மஸ்ஜிதெஹறாமுக்குட் செல்லாமல் தடுத்தார்களென்று ஒவ்வொரு விடத்திலும் கூறுகின்றது.

(2) குர்ஆன் ஷரீபானது, மஸ்ஜிதுகளின் பரிபாலனத்துக்கு அல்லாஹுதஆலாவின் பேரில், ஈமான் கொள்வதையும், நற்காரியங்களையும் நிபந்தனைகளெனத் தீர்மானித்து, குப்ரிலும், ஷிர்க்கிலும் சிக்குண்டிருப்போர் மஸ்ஜிதை செழிக்கச் செய்வோராக விருக்க முடியாதென்றும் அறிவிக்கின்றது. மஸ்ஜிதில் அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுப்பவரென்றும், மஸ்ஜிதைக் கெடுப்பவரென்றும், (2 : 108) ஆயத்தில் அறிவிக்கப் பட்டிருப்போர் நிச்சயமாய் மக்கத்து முஷ்ரிக்குகள் தானென்பது. (8 : 34), (9 : 18) (9 : 19), (48 : 52) ஆகிய ஆயத்துகளும் உறுதிப்படுத்தி விட்டன. மேலும், மக்கத்து முஷ்ரிக்குகளின் காரியங்களையே மிகப்பெரும் அநியாயமென்று குர்ஆன் ஷரீப் அறிவிக்கின்றது. இமாம் திப்ரீ அவர்களின் வார்த்தைகள் இவ்வாயத்துக்களின் மூலமாய்த் தாமாகவே ரத்தாகி விடுகின்றன. ஏனெனின், மக்கத்து குறைஷிகள் தங்களை மஸ்ஜிதெஹறாமை செழிக்கச் செய்வோரென்றும், மஸ்ஜிதைப் பரிபாலிப்போரென்றும் எண்ணியிருந்தனர். ஆனால், அவர்களின் எண்ணம் தவறானதென்றும், அவர்கள் மஸ்ஜிதை செழிக்கச் செய்வோ ரல்லவென்றும், உண்மையில் குரைஷிகள் மஸ்ஜிதை நாசஞ்செய்வோ ரென்றும் அல்லாஹுதஆலா அதிதெளிவாய் விளக்கிக் காட்டியிருக்கிறான். ஏனெனின், மக்கத்து முஷ்ரிக்குகள் மஸ்ஜிதெ ஹறாமில் முஸ்லிம்கள் பிரவேசிக்க வொட்டாமல் தடுப்பவராயும், அல்லாஹுதஆலா வின் தியானத்தை விலக்குபவராயும் இருக்கின்றனர்.

(2:108) ஆயத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது பைத்துல் முகத்தஸின் மஸ்ஜிதாக விருக்கட்டும். அல்லது மக்கமா நகரிலுள்ள மஸ்ஜிதெ ஹறாமாயிருக்கட்டும். மேலும், இவ்வாயத்தில் மக்கத்து முஷ்ரிக்குகளைக் குறிப்பிட்டிருந்தாலுஞ் சரி, அல்லது ரோம் தேசத்து விக்கிரக ஆராதனைக்காரர்களைச் சுட்டிக் காட்டியிருந்தாலுஞ் சரி, ஆனால், (2:108) ஆயத்தானது, அல்லாஹுதஆலாவின் மஸ்ஜிதுகளைச் சார்ந்த ஒரு பொதுவான கட்டளையாகும். மஸ்ஜிதுகளில் அல்லாஹு

தஆலாவை வணங்க வொட்டாமல் தடுத்து, அவைகளை நாசஞ்செய்யும் வகுப்பு, சமூகம், சக்தி ஆகியவைகள் இவ்வாயத்தின் மூலமாய் எச்சரிக்கப் படுகின்றன.

இக்கட்டளை, எல்லா மஸ்ஜிதுகட்கும் பொதுவானதாகும். மஸ்ஜிதுகளில் அல்லாஹுதஆலாவின் வணக்கத்தை எவர் தடுப்பினும், அவர் பெரும் அநியாயக் காரரே. "ஒரு ஆயத்து இறங்கியதற்குக் குறிப்பிட்ட பிரத்யேகமான காரண மிருப்பினும், அவ்வாயத்து பொதுப்படையான கட்டளையைக் கொண்டிருப்பதாய்த் தீர்மானிப்பதில் பாதகமில்லை." (1 : 374. நீஷாபூரி, ஹாஷியா திப்ரீ).

"அஹ்காமுல் குர்ஆனின்" ஆசிரியரும், இதையாதரித்து எழுதி யிருப்பதாவது:— "இக்கட்டளை ஒவ்வொரு மஸ்ஜிதையும் பொறுத்ததாக விருக்கின்றது. ஏனெனின், இவ்வாயத்திலுள்ள பதம் பன்மையாயும், பொதுவாயு மிருக்கின்றது. ஆகவே, இவ்வாயத்தானது, சில மஸ்ஜிதுகளை, அல்லது சில காலத்தை மட்டும் சார்ந்ததென்று குறிப்பிடுவது அசாத்தியம்".

மக்கத்து குறைஷிகள், தாங்கள் கஃபாவுக் கஸ்திவார மிட்டவரென்று கூறி பெருமை பாராட்டிக் கொண்டிருந்தனர். கஃபாவின் ஊழியமானது அவர்களுக்கு பெரும் கீர்த்தியாக விருந்தது. ஆனால், மக்கமாநகரைச் சார்ந்த முஷ்ரிக்குகள், முஸ்லிம்களை மஸ்ஜிதெ ஹராமுக்குள் வரவும், அல்லாஹுதஆலாவை வணங்கவும் கூடாதென்று தடுத்துத் தங்களின் விக்கிரகங்களை, ஆராதனை செய்யும் இடமாக கஃபாவை ஆக்கிவிட்டனர். ஆகவே, அல்லாஹுதஆலா மக்கத்து முஷ்ரிக்குகளை நோக்கி, "அல்லாஹுதஆலாவின் வீட்டிற்கு (முஸ்லிம்கள்) வரக்கூடாதென்று தடுக்கும் உங்களைக் காட்டினும் உலகில் பெரிய அநியாயக் காரர் வேறெவரும் உண்டா?" என்று வினவியிருக்கின்றான்.

முஸ்லிம்கள் மஸ்ஜிதுகளுக்கு வரக்கூடாதென்று தடுப்போர், தங்களை முஸ்லிம் என்று அழைத்துக் கொண்டாலுஞ் சரி, அல்லது மஸ்ஜிதுகளின் முத வல்லிகளாக விருந்தாலுஞ் சரி, உண்மையில் இவர்களின் நிலைமை மக்கத்து முஷ்ரிக்குகளின் நிலைமையேயாகும். மேலும், இவர்களே பெரும் அநியாயக் காரருமாவர்.

முஸ்லிம்கள் வரக்கூடாதென்று தடுக்கப்படும் மஸ்ஜிதுகள் இன்று எத்தனையோ விருக்கின்றன. முஸ்லிம்களை நோக்கி "நீங்கள் இம் மஸ்ஜிதுகளில் வந்து அல்லாஹுத ஆலாவை வணங்க வேண்டா" மென்று அறிவிக்கப் படுகின்றது. சிற்சில சிறிய அபிப்பிராய பேதம், உண்மையும், நியாயமு மற்ற சச்சரவு ஆகியவைகளை முன்னிட்டு ஒவ்

வொரு கூட்டமும், மற்றக் கூட்டத்து முஸ்லிம்கள் மஸ்ஜிதுக்குள் வர முடியாதவாறு அதன் வாயலையடைத்து விடுகின்றது. முஸ்லிம்கள் மஸ்ஜிதுக்குள் வராமல் தடுக்கும் பொருட்டு, இந்திய கோர்ட்டுகளில் எத்தனையோ நட வடிக்கைகள் தொடரப்பட் டிருக்கின்றன. மஸ்ஜிதுக்குள் வரக்கூடாதென்று தடுக்கப் பட்டிருந்தோர், துரதிஷ்டவசமாய் மஸ்ஜிதுக்குள் வந்ததை யொட்டி, மஸ்ஜிதுகளில் எத்தனையோ இரத்தப் பெருக்க மேற்பட்டிருக்கின்றன.

அரசாங்கத்தின் துர்க்கிருத்தியம், அநியாயம், எதேச்சாதிகாரம் ஆகியவைகளை எதிர்த்து, தீனுடையவும், இஸ்லாமுடையவும் உரிமையைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையைக்கூட ராஜீய விவாதமென்றும், அரசாங்கத்துக்குச் சம்பந்தமான காரியமென்றுங்கூறி, நடுக்கமுற்று அதைத் தடுக்க ஜனங்கள் முற்படு வதைக்காணலாம். எதேச்சாதிகாரத்துக்கஞ்சாது, இஸ்லாமிய உரிமையைக்காப்பதற்கான காரியங்கள் உண்மையில் அல்லாஹுத ஆலாவின்வணக்கமும், தியானமுமேயாகும். ஏனெனின், இது நன்மையைஏவி தீமையை யகற்றும் பொருட்டுப் புரியவேண்டிய, நாவைச்சார்ந்த தூய்மையான இஸ்லாமிய 'ஜிஹாத்' என்னும், கடமை என்பதை நிரூபித்து விடுவோமாயின், அவ்வரிய கடமையை முஸ்லிம்கள் புரியவொட்டாமல் தடுப்போர் 2 : 108 ஆயத்தில் கூறியுள்ளவாறு பெரும் அநியாயக் காரரல்லவா ?

(2) ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும், ஒவ்வொரு விஷயத்திற்கும், வேண்டிய உத்தமமான அரிய பதங்கள் குர்ஆன் ஷரீபுக்குக் கிட்டிவிடுகின்றன. இது குர்ஆன் ஷரீபின் அற்புதமும் விசேஷமுமல்லவா ? குர்ஆன் ஷரீபின் ஒவ்வொரு ஆயத்திலுமுள்ள எப்பதத்தையேனும் எடுத்து விடப்படுமாயின், அவ்வாயத்தில் வேறு பதத்தை இணைக்க முடியாது. (2 : 108) ஆயத்தில் "அதி அநியாயம்" (அழுலம்) என்னும் பதமிருக்கின்றது. "எவ்வஸ்துவையேனும் அதன் நோக்கத்திற்கெதிரிடையாய் நியாயமின்றி கையாடுவதும், ஒரு வஸ்துவை அதற்குரிமை யில்லாதோர்க்கு வினியோகஞ் செய்வதும் (ழுல்ம்) அநியாயமென்று அறிவிக்கப்படுகின்றது" (முப்ரதாத்.)

மஸ்ஜிதுகளினுள் அல்லாஹுத ஆலாவை வணங்க ஒட்டாமல் தடுப்பதை 'அநியாய'மென்று இவ்வாயத்தில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலின், மஸ்ஜிதுகளில் அல்லாஹுத ஆலாவின் தியானத்தைத் தடுப்போர், மஸ்ஜிதுகளைக் கட்டுவதின் நோக்கத்திற்கு விரோதமான காரியத்தைச் செய்பவரென்று கூறுவோம். ஏனெனின், அல்லாஹுத ஆலாவுக்கென்று குறிப்பிடப் பட்டுப்போன மஸ்ஜிதுகளில் மானிடருக்கு எத்தகைய உரிமையும் கிடையாது.

இந்நிலைமையில் மஸ்ஜிதுகளை மானிடரை உயர்வு படுத்தக்கூடிய ஸ்தலமாகச் செய்வது, ஒரு வஸ்துவை அதன் உரிமையற்ற பிறர் கைப்பற்றுவது போன்ற அநியாயமல்லவா?

மஸ்ஜிதுகளைக் கட்டப்படுவதன் உண்மையான நோக்கமின்ன வென்பதை, அல்லாஹுத ஆலா அடுத்தடுத்து விளக்கிக்காட்டி யிருக்கின்றான்.

"எந்த இல்லங்களை கௌரவப் படுத்துமாறு அல்லாஹுத ஆலா கட்டளை யிட்டிருக்கிறானோ? அவ்வில்லங்களில் இத்தீபத்தை யேற்றப்படுகின்றது. மேலும், அவ்வில்லங்களில் அல்லாஹுத ஆலாவின் நாமத்தைத் தூய்மைப்படுத்தத்தக்க காரியங்கள்நடைபெறவேண்டும். அவ்வில்லங்களில் அல்லாஹுத ஆலாவின் உண்மையான அடியார்களும், மூமின்களும், காலையிலும் மாலையிலும் அல்லாஹுத ஆலாவைப் புகழ்வது, தூய்மைப் படுத்துவது ஆகிய காரியங்களிலேயே ஈடுபட்டிருப்பார்கள்." (64:36 அல்குர் ஆனின் வியாக்யானம்.)

மஸ்ஜிதைக் கட்டப்படுவதைச் சார்ந்த நோக்கம் இன்னதென்பது (64:36) ஆயத்தின் மூலமாய்த் தெளிவாகி விடுகின்றது. இந்நிலைமையில், அல்லாஹுத ஆலாவைச் சிந்தித்து மஸ்ஜிதுகளில் நடைபெறும் தியானத்தைத் தடுப்போர், மஸ்ஜிதைக் கட்டுவதின் நோக்கத்தை நிறைவேற வொட்டாமல் தடுக்கக் கருதினார்களென்பது வெளிப்படை. ஆகவே, மஸ்ஜிதுகளில் அல்லாஹுத ஆலாவை தியானஞ் செய்யாமல் தடுப்பதையே அநியாய மென்று அறிவிக்கப்படுகின்றது. அல்லாஹுதஆலாவுக்கு இணை ('ஷிர்க்கு') வைப்பதையும் அல்லாஹுதஆலா அநியாயமென்னும், பதத்தைக் கொண்டே அறிவுறுத்துகிறான். "இணை (ஷிர்க்கு) வைப்பது மிகப்பெரும் அநியாயமாகும்" (36:13 (அல்குர்ஆனின் வியாக்யானம்)

அல்லாஹுத ஆலாவின் சந்நிதானத்தில் வணங்குதற் காகவே மானிடருக்குச் சிரசும், அல்லாஹுதஆலாவைத் துதித்துப் புகழ்வதற்காக மானிதருக்கு நாவும், அல்லாஹுதஆலாவின் சந்நிதானத்தை அடையும் பொருட்டு விரைந்து செல்லுவதற்காகவே மானிடருக்குக்காலும் அளிக்கப்பட்டிருக்கும் நிலைமையில், அவைகளை சர்வ வல்லமையுமுள்ள அல்லாஹுதஆலாவுக்கன்றி வேறெதற்கேனும் ஈடு படுத்துவது அநியாயமாகும். ஏனெனின், மானிடரின் சிரசு, நா, கால் முதலியவைகளைப் படைக்கப்பட்ட தன் நோக்கத்துக்கு இது விரோதமான காரிமா யிருப்பதாலேயாம்.

மஸ்ஜிதில் அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுப்போர் அதியநியாயக்காரரென்று 2:108 ஆயத்தின் மூலமாய் அல்லாஹுத

ஆலா எச்சரித்திருக்கும் போழ்து, அல்லாஹுதஆலாவின் தியானத்தைத் தடுப்போர் தங்களின் துர்க்கிருத்தியக் கேட்டை சிந்தித்து, அழுமாட்டார்களா? அல்லாஹுதஆலாவுக்காகவும், அவனின் கௌரவத்துக்காகவும், கட்டப்பட்டுள்ள பரிசுத்தமான மஸ்ஜிதுகளை அல்லாஹ் அல்லாத இதரர்களுக்குச் சொந்தப்படுத்துவது மன்னிக்கத்தகாத பெரும் பிசகல்லவா? அல்லாஹுத ஆலாவை தியானிப்பதற் காகமட்டும் சொந்தமான மஸ்ஜிதுகளை, மானிடராய்ப் பிறந்த அரசர்களின் கட்டளையையும், உலகில் எதேச்சாதிகாரம் புரிவோரின் உத்தரவுகளையும் நிறைவேற்றப்படு மிடமாக செய்யப் பட்டிருக்கின்றனவல்லா? இது, அல்லாஹுத ஆலாவின் திருமொழிப்படி அதி அநியாயகரமான காரியமல்லவா? அல்லாஹுத ஆலாவின் பரிசுத்தமான இல்லங்களை ஷைத்தான்களை வணங்கும் அடிமைகளின் ஆலயங்களாக மாற்றிவிடக் கருதுவோர், மிகக்கொடிய ஈனர்களல்லவா? அல்லாஹுத ஆலாவின் மஸ்ஜிதுகளைச்சார்ந்த பரிசுத்தமான முற்றங்களை, வானவர் இறங்கும் சிறப்புற்ற முற்றங்களை பூமியிலுள்ள மிகக் கெடிய அசுத்தமான பொல்லாதவரின், பலத்தை வெளியிடுதற்குரிய படுகுழிகளாகச் செய்துவிடவேண்டு மென்பதே, அல்லாஹுதாலாவின் கோபத்திற்கிலக்கான ஈனர்களின் நோக்கமாகும்.

கற்களாற் செய்யப்பட்ட விக்கிரகங்களை மஸ்ஜிதெஹராமில் நிறப்பிய மக்கத்து முஷ்ரிக்கு களுக்கும், அம்முஷ்ரிக்குகளின் சந்ததிகளான இவ்வீனர்களுக்கு மிடையில் விசேஷ வித்தியாச மிருப்பதாகத் தெரியவில்லை. அல்லாஹுத ஆலாவின் பரிசுத்தமான கட்டளையை வெளியிடுவதற்குரிய கௌரவமான "மிம்ப" ரிலும் அல்லாஹுஆலாவின் திருச் சந்நிதானத்தைப் பணிவதற்காக மட்டு முள்ள சிறப்பான "மிஹ்ரா" பிலும், அல்லாஹ் அல்லாதவைகளை கௌரவித்தும், புகழ்ந்தும், அவைகள் அசுத்த மாக்கப் படுவதை உலகம் பன்முறை பார்க்கவில்லையா? அல்லாஹுதஆலாவை மட்டும் வணங்கி அவனின் அடிமை யென்று பதிவு செய்து கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ள மஸ்ஜிதை, 'அல்லாஹ்' அல்லாதவைகளின் அடிமைகளாகப் பதிவு செய்து கொள்ளு மிடமாக மாற்றி, அதை அசுத்தப்படுத்துகின்றனர். மக்கத்து குறைஷிகள் மஸ்ஜிதெ ஹராமில் அல்லாஹுதஆலாவை தியானம்செய்யக் கூடாதென்று தடுத்து, அம்மஸ்ஜிதில் கற்களாற் செய்யப்பட்ட விக்கிரகங்களை நிறுத்தி வைத்தார்கள். ஆதலின், அல்லாஹுத ஆலா, மக்காவின் முஷ்ரிக்குகளை "அதியநியாயக் காரர்க" ளென்று கூறியிருக்கின்ற நிலைமையில், இன்று எவர் மஸ்ஜிதுகளில் அல்லாஹுத ஆலாவின் கட்டளையைமறுத்து, அதற்கு

மாருக அல்லாஹ் அல்லாதவைகளின் கட்டளையை பகிரங்கஞ் செய்வதோடு, உயிரற்ற விக்கிரகங்கட்குப் பதிலாய் ஜீவனுள்ள மானிட விக்கிரகங்களுக்குத் தலைவணங்குவோர், மக்கத்து முஷ்ரிக்குகளைக் காட்டினும் பெரிய அநியாயக்கார ரென்பதில் சந்தேகமுண்டா? மேலும், மக்கத்து குரைஷிகளைச் சார்ந்த அநியாயக்காரரைக் காட்டினும், மானிடரை வணங்குகின்ற இன்றைய அநியாயக்காரர் அல்லாஹுத ஆலாவின் கோபம், தண்டனை முதலியவைகளால் கணக்கின்றி துன்புறுத்தப்படுவார்களல்லவா ?

காலையிலும், மாலையிலும், இரவும், பகலும் அல்லாஹுத ஆலாவின் நாமம் உச்சரிக்கப் படுவதற்காகவே மஸ்ஜிதுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆதலின், மஸ்ஜிதுகளை அல்லாஹுத ஆலாவின் தியானத்திற்கு மட்டும் உரியவிடமாக் செய்துவிட வேண்டுமேயன்றி, அல்லாஹுத ஆலாவின் பகைவர் உங்களில்லங்களைக் கைப்பற்றிக் கொண்டதைப்போல், அல்லாஹுத ஆலாவின் மஸ்ஜிதுகளையும் அவர்கள் கைப்பற்றிக் கொள்ளும்படி நீங்கள் அழைக்காதீர்கள். அல்லாஹுத ஆலாவை தியானிப்பதற்குரிய பரிசுத்த ஸ்தலங்களை, அல்லாஹுத ஆலாவின் பகைவரான மானிடரை வணங்கக்கூடிய ஆலயங்களாகச் செய்துவிடாதீர்கள். உங்கள் கிரீடத்தையும், சிம்மாசனத்தையும் பாதுகாக்க முடியாத நீங்கள், அல்லாஹுத ஆலாவை அடிபணிதற்குரிய சிம்மாசனத்தின் தூய்மையை, அயோக்கியரின் பொருட்டு ஆபாசம் செய்துவிடாதீர்கள். அல்லாஹுதஆலா தன்னை வணங்குவதற்காக மட்டும் இப்பரிசுத்தமான கட்டடத்தை உங்களுக்களித் திருக்கின்ருன். ஆகவே, அவ்விடத்தில் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் அடிபணிந்து, அவனை மட்டும் நேசியுங்கள். மஸ்ஜிதுகளில் அல்லாஹுதஆலாவின் பகைவருக்காகப் பிரார்த்தனை செய்யாதீர்கள்.

அரசர்களையும் (பணக்காரர்களையும்) பூசிப்பதற்காக மஸ்ஜிதுகளில் உங்கள் கரங்களை உயர்த்தாதீர்கள். அல்லாஹுதஆலாவின் பரிசுத்தமான இல்லத்தில் அவனை மட்டும் துதித்துப் புகழவேண்டுமே யன்றி, மானிடரைத் துதித்துப் புகழ்வது உங்கட்கு அழகாகுமோ? 2:108 ஆயத்தின் மூலமாய் ஒரு விஷயம் சாதாரணமாக எல்லோருக்கும் விளங்கக்கூடியதாக விருக்கின்றது. அஃது, ஒரு காலத்தையேனும், ஒரு சம்பவத்தையேனும், குறிப்பிடாமல் ஒவ்வொரு காலத்திலும், ஒவ்வொரு அகம்பாவத்தையும் எச்சரிக்கத் தக்கதாக விருக்கின்றது. 2:108 ஆயத்தில், மஸ்ஜிதில் அல்லாஹுதஆலாவின் தியானத்தை தடுப்பதையும், மஸ்ஜிதுகளை அழிப்

பதையும் 2 : 108 ஆயத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றான். ஆகவே மஸ்ஜிதில் அல்லாஹுத்தஆலாவின் வணக்கங்களைத் தடுப்பதானது மஸ்ஜிதுகளை யழிப்பதற்கு முயலும் காரியமென்பதும் 2 : 108 ஆயத்தின் ஒரு வியாக்யானமாக இருக்கிறதென்று புலப்படுகின்றது.

மக்கத்து முஷ்ரிக்குகள் அல்லாஹுத்தஆலாவின் தியானத்தைத் தடுத்தார்களாதலின் அவர்கள் மஸ்ஜிதுகளை செழிக்கச் செய்தார்களென்று கூற முடியாது. மஸ்ஜிதுகள் செழிப்பதற்குரிய வேலையைச் செய்யாமலிருப்பது மஸ்ஜிதையழிப்பதற்கான முயற்சியேயாகும். ('தப்ஸீர் முஹாயிமீ' பக்கம் 57)

இவ் விரித்துரையின்படி அல்லாஹுத்தஆலாவின் தியானத்தைத் தடுப்பதற்கான காரியங்கள் மஸ்ஜிதை யழிப்பதற்குரிய காரியமென்றேற்படுகின்றதல்லவா? மற்றொரு விரித்துரையாவது மஸ்ஜிதையழிப்பதைச் சார்ந்த முயற்சி இருவகையாகும். அதிலொன்று, தொழுவோர் வணக்கம் புரிவோர் மஸ்ஜிதுகளையண்டியிருப்போர் ஆகியவர்களை மஸ்ஜிதுக்கு வராமற்றடுப்பதாகும். இது உண்மையில் மஸ்ஜிதை யழிக்கும் காரியமாகும். மற்றொன்று, மஸ்ஜிதை யிடித்துத் தள்ளுவதாகும். (தப்ஸீர் கபீர் 1 : 476).

மஸ்ஜிதில் வணங்க வருவோரை வராமல் தடுப்பதும் மஸ்ஜிதை யிடிப்பதும் ஆகிய இவ்விரண்டும் மஸ்ஜிதுகளை யழிக்கும் காரியமென்பது மேற் கூறிய விரித்துரையின்படி தெளிவாகி விடுகின்றது.

மஸ்ஜிதுகளில் வணக்கம் புரிவோரின் இரத்தத்தைச் சிந்துவது அல்லாஹுத்தஆலாவின் இல்லத்தில் அடைக்கலம் புகுந்திருப்பவரோடு சச்சரவு செய்வது மஸ்ஜிதுகட்குத் தொழ வருவோரை நீண்ட காலம் வரையிலாவது சொற்ப நேரமாவது தடுப்பது ஆகிய துர்க்கிருத்தியத்தைப் புரியும் கூட்டமும் நபரும் மஸ்ஜிதெ ஹராமில் முஸ்லிம்களை வரவொட்டாமல் தடுத்த மக்கத்து முஷ்ரிக்குகளைப் போன்றவரேயாகும். ஆதலின், மக்கத்து முஷ்ரிக்குகளிடத்தில் நடந்து கொண்டது போலவே இக்கொடியோரிடத்தும் நாம் நடந்துகொள்ள வேண்டும்.

(தொடரும்)

எந்த முஸ்லிம் தொழுகிறானோ, அவனின் பாபங்கள் கோடைகால மாதத்திலிருந்து இலையுதிர்வதுபோல உதிர்ந்துவிடுகின்றன. ஓர் ஆற்றில் தினமொன்று ஐந்து தடவைகள் குளிப்பதனால் சரீரத்தின் அழுக்கு நீங்குவது போல் தொழுகையின் பொருட்டு பாபத்தின் கசடுகள் நீங்குகின்றன.

மூமின்கள் அடைந்த வெகுமதிகள்.

சர்வவல்லமை கிருபையுள்ளவனும், தான் அளித்த வாக்குறுதிக்கு கொஞ்சமும் மாறி நடக்காதவனுமாகிய, பரிசுத்த அல்லாஹுதஆலா அதியுயரிய உன்னதமான அநேக பரிசுகளை, முஸ்லிம்களுக்காக மட்டும் சொந்தமாய் அளித்திருக்கின்றான். அப்பரிசுகளைப் பற்றி தன் பரிசுத்த குர்ஆன் ஷரீபில் அறிவித்திருப்பதாவது:— "எவனின் ஹிர்தயத்தை அல்லாஹுதஆலா இஸ்லாம் மார்க்கத்தையேற்றுக் கொள்ளுவதற்காகத் திறந்து விட்டானோ? அவன் அல்லாஹுத ஆலாவால் அளிக்கப்பட்ட ஓர் ஒளிக்குப் பாத்திரனாகி விடுகின்றான்"(அல்குர்ஆன்). அல்லாஹுதஆலா தன் பரிசுத்த திருமறையில் தன்னைப்பற்றி அறிவிப்பதோடு முஸ்லிம்களையும் சேர்த்து ஏழிடங்களில் மொழிந்திருப்பதாய், சில முபஸ்ஸிரீன்களான மஹான்கள் வரைந்திருப்பதாவது:—

1-வது "இதாஅத்"—வழிப்படுதல். அல்லாஹுத ஆலாவுக்கும், அவனின் ரஸூலுக்கும், இன்னம் உங்களின் (முஸ்லிமான) அதிகாரி (ஆலிம்-இஸ்லாம் மார்க்கத்தின் சட்டதிட்டங்களை நன்கறிந்தவர், ராஜர்)க்கும் வழிபட்டு நடந்துக் கொள்ளுங்கள்.

2-வது "விலாயத்"—நேசம். சில யூதர்கள் "நாங்கள் ஈமான் கொண்டு, இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து விடுவோமாயின், குரைஷி வம்சத்தினர் எங்களைவிட்டும் பிரிந்து போய்விடுவார்கள். ஆகவே, விரோதிகளை யெதிர்ப்பதற்கு எங்களுடன் எவரும் சேர்ந்து கொள்ளமாட்டார்கள்" என கூறினார்கள். அதற்கு "அல்லாஹுத ஆலாவும், அவனின் ரஸூலும், மூமினானவர்களும் ஒருவருக்கொருவர் நேசர்களாகும் என அறிவித்திருக்கிறான்.

3-வது "இஜ்ஜத்"—கண்ணியம். முஸ்லிமானவர்களே! கண்ணியமாகிறது: அல்லாஹுத ஆலாவிற்கும், அவனுடைய ரஸூலுக்கும், உங்களு (மூமினானவர்களு)க்கு முடையதாகும். உலகில் வேறுயெவரும் அக்கண்ணியத்தை யடைவதற்குத் தகுதியுடையவரன்று.

4-வது "ஷஹாதத்"—சாட்சியம். அல்லாஹுத ஆலா தன் ஏகதெய்வீகத்தன்மையின் பேரில் தானே சாட்சியங்கூறுகிறான்.

அவனின் மலக்குகளும், கல்வி மான்களும் (உண்மையான சாட்சிப் கூறுவதில் ஸ்திரமாய் இருக்கும் நிலைமையில்) அல்லாஹு த ஆலா வின் ஏகதெய்வீகத் தன்மையின்மீது சாட்சிப் பகருகின்றார்கள்.

5-வது "முராகபத்"—காட்சி. முஹம்மதே (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) நீர் சொல்லும். "ஓ முஃமின்—நபவஞ்சகர்களே! நீங்கள் உங்களின் மனோயிஷ்டப்படி நடந்து கொள்ளுங்கள். சமீபத்தில் நீங்கள் புரியும் துர்க்கிருத்தியங்களுக்கு ஈடாகத் தண்டனையை யடைவீர்கள். அதைச் சங்கைவாய்ந்த அல்லாஹு தஆலா, அவனின் ரஸூலும், முஸ்லிமானவர்களும் கண்ணுறுவார்கள்.

6-வது "மவாலாத்"—ஒற்றுமைப்பு. சந்தேகமின்றி அல்லாஹு தஆலாவும், ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாமும், நற் பாக்கியத்தையுடைய முஸ்லிமானவர்களும் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்குக் காவலானவர்களாகும்.

7-வது "வஅதது தன்னத்"— சுவனத்தின் வாக்குறுதி. "அல்லாஹு த ஆலா மூமினனவர்களுக்கு திவ்விய மதுரநீர் பெருகியோடும் அருவிகளையுடைய சுவர்க்கத்தை யளிப்பதாய் உறுதியிட்டிருப்பது" (அல்குர்ஆன்)

மேற்கூறப்பட்ட ஏழுநற்பாக்கியங்களையும் அல்லாஹு த ஆலா மூமினனவர்களுக்குமட்டும் சொந்தமாய் அளித்திருப்பதன்றியும், தன்பரிசுத்த திருநாமமாகிய "மூமின்" என்ற பெயரையும் அவர்களுக்கு அளித்திருக்கின்றான். ஆகவே, அவன் மூமினனவர்களை தன் குர்ஆன் ஷரீபில் பலவிடங்களில் "யாஅய்யு ஹல்லதீன ஆமனூ!" என்று அப்பெயர்க் கொண்டழைக்கின்றான். அதனால், அறிவின் மஹான்கள் தெரிந்தெழுதி யிருப்பதாவது:—இராஜர்களுக்கெல்லாம் இராஜாவான அல்லாஹு த ஆலா தன் பரிசுத்த பெயரைப்படைப் பெற்றவர்களுக்கு ஹஷ்ர்மைதானத்தில் இரட்டிப்பான சுவனம் தருவதாய் ("எவன் தன் நாயனின் சந்நிதானத்தில் பயந்தவனாகவிருக்கின்றானோ? அவனுக்காக இரண்டு சுவனம் இருக்கின்றன" சூரத் ஜும்ஆ) வாக்களித் திருப்பதில் யாதும் ஆச்சரியமில்லை. உதாரணமாக:—

மஹ்மூது கஜ்னவி அவர்கள் இந்தியாவின் வெற்றிப் பொருளோடு, தங்கள் தேசம் சேர்ந்தபொழுது, யுத்தவீரர்களுக்கு பரிசளிக்கப் போவதாயும், அச்சமயம் சிப்பாய்கள் பாத்ஷாவிடத்தில் தங்கள் தங்கள் பெயர்களைச் சொல்லி இனாமைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாய்க் குறிப்பிட்டு, ஓர் அறிக்கையை வெளியிட்டார். அதன்படி குறிப்பிட்ட தேதியில் சிப்பாய்கள் வந்து தங்கள் பெயர்களைக் கூறி

விட்டு, இனும்படைந்துச் சென்றனர். ஆனால், அவர்களில் ஓர் சிப்பாய் பாத்ஷாவின் சமுகஞ் சென்று தன்பெயரைக் கூறாது, மௌனமாய் நின்றார். மஹ்மூது கஜ்னவியவர்கள் அச்சிப்பாயை நோக்கி "நீ ஏன் உன் பெயரைச் சொல்லாது, மௌனம் சாதிக்கின்றாய்? அதன் காரணமென்ன"? வென்று வினவினார். அதற்கு அச்சிப்பாய் "உலக காவலரே! என் பெயர் தங்களின் பெயரே" என்று கூறினார். ஆகவே, மஹ்மூது கஜ்னவி அவர்கள் அவ்வுத்தவீரருக்கு, ஏனையோருக்கு அளித்த இனுமைப் பார்க்கினும் இரட்டிப்பான இனுமை யளித்தார், என்பது சரித்திரத்தில் வரையப் பட்டிருக்கின்றது.

உலகத்தையாட்சி புரியும் இராஜா, தம் பெயர் கொண்ட சிப்பாய்க்கு அதிக இனும் அளித்திருக்கும் ஸ்திதியில் எல்லாம் வல்ல நாயன் தன்பரிசுத்தப் பெயர் கொண்டவர்களுக்கு அநேக இனும்களை யளிப்பது அவனுக்கியலாத காரியமன்று.

அல்லாஹ் ஜல்லஷானஹுு வதஆலா தன்பரிசுத்த குர்ஆன் ஷரீபில் மற்றோரிடத்தில் "மூமினவர்களை மலக்குகள், அல்லாஹுு தஆலாவின் கட்டளையின்படி ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு இடத்திலும் பாதுகாத்து வருகின்றார்கள் (அல்குர்ஆன்) என அறிவித்திருக்கின்றான்.

அன்பார்ந்த முஸ்லிம் சகோதரர்களே! மேற்கூறிய பலஆயத்துகளின் மூலமாய், அல்லாஹுு தஆலா தன் பரிசுத்த "மூமின்" என்ற நாமத்தை முஸ்லிம் களுக்குச் சூட்டியிருப்பது மட்டுமின்றி, அவர்களின் பேரில் அநேக கருணை, கிருபை ஆகியவைகளை யளித்திருக்கின்றான். ஆகவே, நாமும் ஒவ்வொரு நிமிடமும் அல்லாஹுு தஆலாவின் பொருத்தத்தை நோட்டமிட்டு, அவனின் உத்திரவு பிரகாரம் அமல் செய்யவேண்டியது, நம்பேரில் அத்தியா வசியமாகும்.

பெற்றோருக்கு பணிதலின் பெருமை.

சிறுவர்களுக்கும், வாலிபர்களுக்கும் ஓர் நற்போதனை

சங்கை பொருந்திய அல்லாஹுு தஆலா தன் பரிசுத்த குர்ஆன் ஷரீபில் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து, அவர்களிடத்தில் மரியாதை, கண்ணியம் ஆகியவைகளுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று

முடுத்தடுத்து எச்சரிக்கைச் செய்திருக்கின்றான். நம்முடைய தலைவர், இருலோகரட்சகர் ஜனுப், மௌலானு, ஹஜ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களும் பெற்றோரிடத்து தயாளம் கிருபை, கருணை, நன்றியறிதலுடனும் அன்புடனும், நடந்து கொள்ளும்படியாய் கண்டித் திருக்கின்றார்கள். ஆனால், நம்முடைய துரதிஷ்டமானது தற்காலம் பொதுவாய்ப் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு அடிப்பணிதல், மரியாதை செய்தல் போன்றவைகளை வெறுத்துத் தள்ளிவிட்டு, சுயேச்சையாக வழிகேட்டில் சிக்குண்டிருக்கின்றனர். அவர்களில் மிகுந்தவர்கள் ஆங்கிலம் போதிக்கப்படும் பள்ளிக்கூடம், கல்விச்சாலை ஆகியவைகளில் கல்வி பயில்பவர்களே. அவர்கள் எந்த திட்டத்திற்கு நம்பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தின் சட்டதிட்டங்களின்படி தங்களின் தாய்தந்தைக்கு, நற்குணத்தோடும், அதப் மரியாதை, கண்ணியம், கீழ்ப்படிதல், அவர்களிடத்தில் எதிர் பேசாதிருத்தல் ஆகியவைகளோடு நடந்து கொள்ளவேண்டுமோ? அவைகளை முற்றும் தங்களின் ஹிர்தயத்திலிருந்து நீக்கிவிடுகின்றனர். ஆனால், உண்மையில் ஆங்கிலம் கற்பதனுல் அக்குறை யேற்படுவதில்லை. ஏனெனின்? இஸ்லாம் மார்க்கத்தில் சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் அகாயித்—மூலக்கொள்கையின் படிப்பு, பிக்ஹு அனுஷ்டான முறைகளின் படிப்பு ஆகியவைகளைப் போதியவளவுக் கற்றுக்கொண்டதன் பின்பு (இவ்விதம் அகாயித், பிக்ஹு ஆகியவைகளைப் போதியவளவுக் கற்றுக்கொள்ளாமல், வேறு பாஷைகளைப் படிப்பதும், அரபியின் ஸர்பு, நஹ்வு ஆகியவைகளைப் படிப்பதும் ஹராமாகும்-விலக்கப்பட்டதாகும்) அரபி, பார்ஸி, உருது, ஆங்கிலம், தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், பிரான்ஸி, ஜெர்மனி, ஜப்பான், சைனம் போன்ற உலகின் எப்பாஷைகளையும் படிப்பதை விலக்கப்படவில்லை. ஆனால், இஸ்லாம் மார்க்க சட்டதிட்டங்களை நன்கு தெரிந்துக் கொள்ளுவதோடு, உலகிலுள்ள இதர பாஷைகளையும் கற்று, அவைகளின் மூலமாய் இஸ்லாமுக் குன்ழக்கவேண்டும். இதரமதத்தினர்களுக் கிடையில் இஸ்லாம் மார்க்கப் பிரசாரஞ் செய்யவேண்டும். ஏகதெய்வீகத் தன்மையையும், நபித்துவத்தின் மேன்மையையும் உலக சமூகங்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

ஆனால், தற்காலம் சிறுவர்கள் கெட்டுப்போவதன் முக்கிய காரணமாவது:— பெற்றோர்கள் தங்களின் சிறுவர்களுக்கு சிறுவயதிலேயே, நன்றாய் தர்பியத்—ஒழுக்கம், மரியாதை ஆகியவைகளைச் சரிவரக் கற்பிக்காததினுலும், கெட்டவர்களின் சகவாசத்தினுலும் உண்டாகின்றன. துற்குணங்களுடைய சிறுவர்களின் துர்க்கிருத்தி

யங்களுக்கு அவர்களின் பெற்றோர்களும் * அவர்களின் நேசர்களுமே ஜவாப்தாரியாவார்கள். வீட்டில் அநேகமாய் கல்வியில்லாத நிர் மூடர்களாகிய தாய்மார்களும், மற்ற மாதர்களும் உண்டாயிருக்கின்றனர். ஆகவே, அவர்கள் தங்களின்சிறுவர்களுக்கு பரிசுத்த குர்ஆன்ஷரீபையும்,இஸ்லாம் மார்க்க சட்டதிட்டங்களையும், நற்குணங்களையும் கற்பித்து வைக்கவேண்டியதற்கு முற்றும்மாறாக, பெற்றோர்களே தங்கள் பாலகர்களை சிறுவயதில் செல்லமாயும், பட்சமாயும் வளர்ப்பதன் பொருட்டு, அச்சிறுவர்களுக்கு துற்பாஷையைக் கற்பிக்கின்றார்கள். யாது மறியாப்பாலர்கள் அத்துற் சொற்களை மொழியும் போழ்து ஆனந்த மடைகின்றனர். அவர்களின் கரத்தில் குச்சியைக் கொடுத்து மற்றவர்களை யடிக்கச் செய்கின்றனர். அச்சிறுவர்கள் அவர்களை யடிக்கும் போழ்து சந்தோஷமடைகின்றனர். அவர்களின் சுற்றத்தார்களும், நேசர்களும் ஆனந்தமுற்று, பூரிப்படைகின்றனர். அவர்கள் சிறுவர்களுக்கு இளவயதில் கற்பித்த ஒழுக்க மற்ற செய்கைகளைத் தங்கள் பெரியோர்களோடு செய்வதையும், துர்ச்

* தற்காலமுள்ள அநேகர்கள் தங்களுக்கும் பேரளவில் இரண்டு, மூன்று பிள்ளைகளிருக்கின்றன என்றால் போதும். அவர்களுக்கு நன்றாய் உண்ணக் கொடுத்து, ஹராமானதும், மெல்லியமானதுமாகிய உடுப்புகளைக்கொடுத்து செல்லமாய் வளர்க்கவேண்டியது தான் தங்களின் கடமையென எண்ணிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் பிள்ளையின் அடிமைகளே யன்றி வேறில்லை. ஏனெனின்? இவர்கள் பிள்ளையின் சொற்படி நடப்பவர்களாக விருக்கின்றனர். பிள்ளைகள் குற்றம் செய்யுமிடத்து அவர்களைக் கண்டிப்பதில்லை. அவர்களுக்கு அதப் மரியாதையைக் கற்பிக்கிறதில்லை.

சிலர் ஏதோ கொஞ்சம் தமிழ்ப்பாஷையை கற்றுவைக்கின்றனர். இன்னுஞ் சிலர் தமிழோடு சொற்ப ஆங்கிலமும் கற்பித்து விட்டால் போதுமெனக் கொள்ளுகின்றனர். இப்படிப்பட்ட பிள்ளைகள் அநேகமாய் சில உடுப்புகளினால் மட்டும் முஸ்லிமானவர்களெனக் கருதக்கூடிய நிலைமையி லிருக்கின்றார்களே யன்றி, உண்மையில் ஈமான், இஸ்லாமைக் கொஞ்சமும் அறிந்தவர்களாகவுமில்லை; கற்பிக்கப்பட்டவர்களாகவுமில்லை. வேறுசிலர் ஏதாவது மார்க்கக்கல்வியைக் கற்பிக்கும்படி ஓர் உஸ்தாது—உபாத்தியாயரிடம் அனுப்பினால், அவர் அப்பிள்ளைக்கு நற்குணம் ஒழுக்கம், அதப் மரியாதை ஆகியவைகளைக் கற்றுக் கொடுத்ததன்படி நடக்காததற்கும், அவர்கள் துஷ்டர்களுடன் சேர்ந்து கற்றுக் கொள்ளும் துர்ப்பாஷைகளை யுபயோகிக்காமல் தடுப்பதற்கும், அவர்கள் பீடி, சிகிரட்டு, சுருட்டு ஆகியவைகளைப் பிடிக்காதிருக்கும் படிக்கும் கண்டிக்க முற்பட்டால், உஸ்தாதுபேரிலும், மற்றும் கண்டிப்பவர்கள் மீதும் பாம்பு சீறுவது போன்று சீறிவிழுகின்றனர். அந்தோ ! என்ன இவர்களின் மதியீனம்!! இப்படிப் பட்டவர்கள் தங்களின் பிள்ளைகளினால் அடையவேண்டிய பலனை எங்ஙனம் பெறுவர்!!! இப்படிப் பிள்ளைகள் பழக்கப்பட்டதன் மூலமாகவே இன்றுமுஸ்லிம்கள் உலகின் மற்றசமூகங்களைப் பார்க்கினும் கேவல ஸ்திதியிலிருக்கின்றனர்.

சொற்களை மொழிவதையும் பெற்றோர்கள் கேட்டும், பார்த்தும் வாளாவிருக்கின்றனர்.

இன்று கடைவீதி, தெருவு, சிறிய மதரஸாக்கள் பள்ளிக்கூடம் ஆகிய விடங்களில், சிறுவர்கள் "தாங்கள் பேசிக்கொள்ளுவதன் பொருள் கொஞ்சமும் அறியாதிருக்கும் நிலைமையில்" ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளுவதைக் கேட்ககாது நாண முறுவதோடு, ஹிர்தயமும் பிளந்து போகக்கூடிய தன்மையடைகின்றது. தாய் தகப்பன்மார்கள் தங்களின் பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே "பெரியோர்களிடத்தும், பெற்றோர்களிடத்தும் மரியாதை யொழுங்கோடு நடந்துகொள்ளும்படியாக ஆரம்பமுதற் கொண்டே கற்பித்து வருவார்களாயின், அவை கசடற்ற சிறுவர்களின் ஹிர்தயத்தில் குணஞ் செய்யா திருக்காது. எப்பிள்ளைகள் நன்றாய் ஒழுக்கங்களைக் கற்பிக்கப்பட்டிருக்கின்றனரோ? அவர்கள் நற்பாக்கியத்தை யடைவதோடு, மதிக்கப் பெறுவர்.

நன்றாய் ஒழுக்கம், மரியாதை ஆகியவைகளைக் கற்பிக்கப்பெற்ற நல்ல பிள்ளைகள், எவ்வளவு உயர்ப்பதவிகளை வகிக்கினும், மேன்மையை யடையினும் அவர்கள் தவறி நடக்கார்கள். பார்ப்பதற்குப் பழிப்பாயும், ஏழைகளாயுமுள்ள தங்கள் தாய் தந்தை ஆகியவர்களிடத்தில் தாழ்மையாய், மரியாதையுடன் நடந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் தாங்கள் சிறுவர்களாக விருந்த போழ்து தங்களிடத்து பெற்றோர்கள் கொண்டிருந்த கிருபையையும், அவர்கள் தங்களுக்கு கல்வி, ஒழுக்கம், மரியாதை ஆகியவைகளைக் கற்பித்ததையும் மறவாது, ஒவ்வொரு நிமிடமும் அதைப்பற்றி நோட்டமிட்டு தங்கள் பெற்றோருக்கு நன்றி பாராட்டுகின்றனர். பெற்றோர்களின் கோபச்சொற்களுக்கு எதிர் பேசாதிருக்கின்றனர். அவர்களைப் பார்த்து "சீ" என்றுகூட மொழிவதில்லை. ஆனால், இதற்கு முற்றும் மாறாக கெட்டபிள்ளைகள் கொஞ்சம் எழுதப்படிக்கத் தெரிந்து, ஜீவனத்திற்கு ஏதாவதொரு வழி கிட்டிவிடுமாயின், தங்களின் பெற்றோர்களைச் சந்தோஷமாய் வைத்திருப்பதற்கு எதிரிடையாய், அவர்களைத் தொந்தரைக் குட்படுத்துகிறார்கள். இவர்கள் தாய் வயற்றிலிருந்து பிறந்த போழ்து இவர்கள் தாங்களாகவே யாதொரு காரியங்களைச் செய்ய வியலாதிருந்தனர். உணர்வற்று, கல்வியற்று, உதவியற்று இருந்தனர். மேற்கூறிய நிலைமையிலிருந்த இவர்களை, இவர்களின் பெற்றோர்கள் சொல்லொணா துக்கம், கஷ்ட நிஷ்டூரங்களுக்கு ஆளாகி வளர்த்தனர். ஓடியாடி வருவதற்கும், ஒரு காரியத்தைப் பார்ப்பதற்கும் சக்திவந்து, சொற்ப கல்வியைக் கற்றுக்கொண்டதும்,

தங்களின் பெற்ருேர்களைக் கவனியாது, அவர்களைத் துர்ப்பாஷையால் பேசுகின்றனர்.

இப்படிப்பட்ட கெட்டவர்கள் தாங்கள் உலகில் நாடிய காரியங்களையடையப்பெருர். எப்போழ்தும் அவர்களின் கருமங்கள் முடிவடையாது. இப்படிப்பட்டவர்களில் எவராவது கண்ணியமாய் இருப்பார்களாயின், அது அவர்கள் பெற்ருேர்களின் ஆசீர்வாதத்தினுல் ஏற்பட்டிருக்குமே யன்றி வேறில்லை. ஏனெனின்? பெற்ருேர்களின் துஆக்கள் அம்பைப் பார்க்கினும் மிகவிரைவாய் அல்லாஹுதஆலாவின் சமுகஞ் செல்லக்கூடியது. ஆனுல், அவர்களைத் தொந்தரைக்குட்படுத்தும் போழ்து, தங்கள் பிள்ளைகளின் மீதுள்ள அன்பினுல் சாபஞ் செய்யாது, சகித்துக்கொள்வதனுலேயே இவர்கள் மேம்பதவிகளையடைகின்றனர். பெற்ருேருக்குப் பணிதலினுல் உண்டாயிருக்கும் நன்மைகளை அதிவிசேஷமாய் அறிவிக்கும் ஓர் பெரியாரின் சரித்திர சுருக்கத்தை வரைகின்ருேம்.

எமன் தேசத்தில் "கரன்" என்ெருரு சிறு கிராமம் இருக்கிறது. அக்கிராமத்தில் ஓர் எளியவரின் வீட்டில் ஒரு குழந்தையுண்டாயிருந்தது. அக்குழந்தையின் பெயர் "உவைஸ்" என்று அழைக்கப்பட்டது. அக்குழந்தை வளர்ந்து வாலிப திசையையடைந்தபோழ்து, தகப்பனுர் இறந்துபோய், தாயார் மட்டும் மிக்க பலயீனமாய் இருந்தார்கள். அப்போழ்து நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மதீனுவில் அரசு புரிந்து வந்தார்கள். உவைஸ் நாயகம் அவர்கள்மீது ஈமான்கொண்டு முஸ்லிமாகி விருந்தார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களைச் சந்திக்கவேண்டுமென்ற அவா மேலிட்டு, ஆஷிகெ ரஸூலாகவிருந்தார்கள். ஆனுல், வயது முதிர்ந்து, பலவீனத்துடன், கண்பார்வை யற்றிருந்த தங்களின் தாயார் அவர்களை விட்டுப் பிரிய இஷ்டப்படவில்லை. அவர்கள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பேரில்கொண்ட நட்பாகிறது, தங்களின் தாயாரிடம் விடைபெற்றுச் சென்று, நாயகம் அவர்களைத் தரிசிக்கத் தூண்டிற்று. ஆகவே, ஹஜ்ரத் உவைஸ் அவர்கள் தங்களின் தாயாரிடம் "என் உயிரினும் அதி பிரியமான தாயார் அவர்களே! தாங்கள் உத்திரவு கொடுப்பீர்களாகில், நாயகம் ரஸூலெ அக்ரம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்த திவ்விய தரிசனையை யடைந்து வருகிறேன்" எனக் கேட்டார்கள். அதற்கு அவர்களின் தாயார் "என்னருமை மைந்தனே! நீ அதி பிரியமாய் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலை

ஹிவஸல்லம் அவர்களின் வீட்டிற்குச்சென்று, அவர்களைத் தரிசித்து உடனே திரும்பிவரவேண்டும். ஓ உவைஸ்! தாமதப்படக்கூடாது; வேறு எங்கும் போகக்கூடாது. நான் தன்னே எழுந்திருக்க முடியாதவள். எனக்குதவியாய் உன்னையன்றி வேறு எவருமில்லை'' என சொல்லி யனுப்பினார்கள்.

ஹஜ்ரத் உவைஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருமதினமா நகருக்குச் சென்று, நாயகம் அவர்கள் வீட்டை யடைந்து, நாயகம் அவர்களின் கண்ணியமும், மரியாதையும் மனதிலெண்ணினவர்களாக, மிக்க தாழ்மையோடு "நாயகமே! நாயகமே!!" என மிக அன்பின் தொனியோடு கூவியழைத்தார்கள். ஆனால், அப்போழ்து தெய்வச்செயலாய் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் வீட்டிலில்லை. வீட்டினுள்ளிருந்து தாங்கள் யார்? எத்தேசத்தவர்? தங்கள் பெயர் என்ன? என்ற சத்தங்கேட்டது. ஹஜ்ரத் உவைஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் துக்கசாகரத்தில் மூழ்கிக்கண்ணீர் வடித்தார்கள். "நான் எமன் தேசத்துடையவன்; என் பெயர் உவைஸ், நான் நாயகம் அவர்களின் பரிசுத்த முலாகாத்—தரிசனைக்காக வந்தேன். ஆனால், என் துரதிர்ஷ்டம் அவர்களின் தரிசனையையடையாமல் திரும்பநேரிட்டது, என் பிரியமான ஸலாமை நபித்துவத்தின் தர்பாரில் எத்தி வைக்கவும்'' என மொழிந்தார்கள். நாயகம் அவர்களின் நட்புத் ததும்பிக்கொண்டிருந்த ஹிர்தயத்தையுடைய ஹஜ்ரத் உவைஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லொணு துக்கசாகரத்தில் மூழ்கியவர்களாய் தங்களின் தாயார் அவர்களின் உத்திரவிற்கு மாற்றஞ் செய்யக் கூடாதென்ற யெண்ணத்தோடு, தாயார் அவர்களை யடைந்தார்கள். அவர்கள் நாயகம் அவர்களின் பேரில் கொண்டிருந்த நட்பிற்கோரளவில்லை. உஹத் யுத்தத்தில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஓர் பல் ஷஹீதாகி விட்டதைக் கேள்வியுற்று, நாயகம் அவர்கள் பல்ஷஹீதாகிய போழ்து, நம்முடைய பல் எதற்காக விருக்கவேண்டும்? என்றும், அவர்களின் ஷஹீதாகிப் போன பல் எதுவென்று தெரியாததனுலும், தங்களின் எல்லாப் பற்களையும் பிடிங்கி விட்டார்கள். சில தடவைகளில் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் எமன் தேசப் பக்கமிருந்து நட்பின்வாடை வந்துகொண்டிருக்கிறது என அறிவித்திருக்கிறார்கள்.''

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தங்களின் இல்லத்திற்கு வந்தபோழ்து, காதூனெ ஜன்னத் பாத்திமுத்துஸ்ஸுஹரா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள்மொழிந்ததாவது:

"என் உயிரினும் அதிகப்பிரியமுள்ள என் பிதாவே! தங்களை யாரோ ஒருவர் கூப்பிட்டார். அதற்கு நான் தாங்கள் வீட்டிலில்லை என மொழிந்து விட்டு, அவரின் ஊர், பெயர் ஆகியவைகளை விசாரித்தேன். அவர் எமன் தேசத்தவர் என்றும், தன் பெயர் உவைஸ் என்றும், தங்களைத் தரிசிக்க வந்ததாயும், தங்களின் மூலாகாத் நஸீபில்லாமல்—கிடைக்காமல் போவிட்டதாயும், அவரின் "சலாமை" தங்களுக்கு அறிவிக்கும்படியாய் மொழிந்து சென்றார் என்று கூறினார்கள்.

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இதைக் கேட்டதும், அவர்களின் பரிசுத்த ஹிர்தயத்தில் நட்பு பொங்கி, அவர்களின் பரிசுத்த கண்களில் கண்ணீர் ததும்பலுற்றது. தங்களின் செல்வப் புத்திரியாகிய பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை நோக்கி, ஓ என் புத்திரியாகிய பாத்திமாவே! அவ்வுவைஸை நின் கண்ணால் பார்த்தாயா? இல்லையா? அவரோ உன் தகப்பனின் ஆஷிகானவர் என்று சொல்லிக்கேட்டார்கள். அதற்கு ஹஜ்ரத்பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஆம் (வலது கண்ணால் ரஹ்மத்துடையப் பார்வையைக் கொண்டு) அவரின் முதுகைப் பார்த்தேன் என்றார்கள். நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இதைக்கேட்டு மிக்க ஆனந்த மடைந்தார்கள். ஓ பாத்திமாவே! (ரலியல்லாஹு அன்ஹா) உவைஸைப் பார்த்தயுன்கண்ணைக் கொண்டுவா, அக்கண்ணை யான் முத்தமிடுகின்றேன் என்று முத்தியிட்டார்கள். இன்னும் (ஹஜ்ரத்) உவைஸ் (ரலியல்லல்லாஹு அன்ஹு) அவர்களின் சிபார்சைக்கொண்டு அல்லாஹுதஆலா என் உத்மத்தோர்களில் 70-ஆயிரம் பேர்களின் குற்றத்தை மன்னிப்பான் என்று திருவுளமாகி யிருக்கின்றார்கள்.

அல்லாஹு அக்பர்! இருலோக ரட்சகர் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நட்பு மிகைத்த சொற்களினால், ஹஜ்ரத் உவைஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் உயர்வும், கண்ணியமும் எவ்வளவு உச்சஸ்தானத்தை யடைந்தது! ஹஜ்ரத் உவைஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வுயரிய மேன்பதவியை யடைவதற்கு காரணம் அவர்கள் தங்கள் தயார் அவர்களுக்குச் செய்த பணிவிடையே. அவர்கள் இப்படிப்பட்ட கண்ணியத்தை யடையத்தக்க பணியைச் செய்வதற்கு, அவர்களின் பெற்றோர் கற்பித்துவைத்த ஒழுக்கமே காரணமாகும். "கரன்" என்பது எமன் தேசத்தில் ஓர்சிறிய கிராமமாகும். அச்சிறு கிராமத்தை ஹஜ்ரத் உவைஸ் எவ்வளவு பிரகாசமுறச் செய்து விட்டார்கள். அப்

பிரகாசம் கியாமத்து நாள்வரையில் ஜொலித்துக் கொண்டிருக்கும். அல்லாஹு தஆலாவின் நண்பரின்நேசரை யுலகமுழுவதிலும் அச்சிறு கிராமத்தின் பெயரோடு "காஜா உவைஸ்கர்னீ" ரலியல்லாஹு அன்ஹு என்று அழைக்கப்படுகின்ருர்கள்.

ஓ என்னருமை வாலிப சோதர்களே! காஜா உவைஸ் கர்னீ ரலியல்லாஹுஅன்ஹு அவர்களின் உயர்ப்பதவியை உங்கள் அகக்கண்களால்ஆராய்ந்து, நோட்டமிடுங்கள். அவர்கள் தாயாருக்குச்செய்த பணியின் மூலமாயல்லவா இவ்வுயர் பதவியை யடைந்தார்கள்? நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "பிள்ளைகளின் சுவர்க்கம் பெற்ருேரின் பாதத்திற்குக் கீழ் இருக்கிறது. ஆகவே, தன் சுவர்க்கத்தை யடையப் பிரியப்படுவோர், ஜீவியத்தோடிருக்கும் தன் பெற்ருேருக்கு அடிபணிந்து நடக்கவேண்டும். அவர்களின் மனதை யுல்லாசப் படுத்தவேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கின்ருர்கள். ஆகையினுல், எந்தப் பிள்ளைகள் தாய்தகப்பனுக்கு அடிபணிந்து நடப்பதைத் தன்பேரில் பரலாக்கிக் கொண்டனரோ, அவர்களே இருலோகத்திலும் நற்பாக்கியத்தை யடைவார்கள். எந்தப் பிள்ளைகள் மேற்கூறியவாறு நடந்து கொள்ளுகின்றனரோ, அவர்கள் உலகத்தில் உல்லாசத்தை யடைந்து, அல்லாஹுதஆலா விடத்திலும், அவனின் திரு ரஸூல் இடத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களாகுவார்கள்.

ஓ எல்லாம்வல்ல கிருபை வாய்ந்த தயாளுவே! முஸ்லிமானவர்களின் சிறுவர்கள் தங்களின் பெற்ருேருக்கும், பெரியோர்க்கும் ஒழுக்கம், மரியாதையாக யெப்போழ்தும் நடந்து கொள்ளவும், சிறுவர்களிடத்தில் அன்பும், தன் போன்றவர்களிடத்தில் சங்கையாகவும் நடந்துக் கொள்ளக்கூடிய நற்பாக்கியத்தைத் தந்தருள் புரிவாயாக! ஆமீன். (ஸூபி).

(குறிப்பு:—இதில் அநேகமாய் ஆண்பால் சொற்களையே உபயோகப்படுத்தி யிருந்தாலும், பெண்களும் அவ்விதமே நடந்து கொள்ளவேண்டு மென்பது கடமையாகும்.)

ஒரு தொழுகையிலிருந்து, மறுதொழுகைக்கிடையில் உண்டாகும் தொழுகையாளியின் சிறுபாபங்கள் மன்னிக்கப்படும், தொழுகை மூமின் என்பதற்கு அடையாளமாகும்.

நுஸ்ரதுல் ஹமீது, பீ தப்ஸீரி குர்ஆனில் மஜீது.

என்ற மொழிபெயர்ப்புச் சரியானதா?

பொறுப்பு வாய்ந்த "மஜ்லிஸுல் உலமாவின்" காரியதரிசி அவர்களின் மேலான சமுகத்திற்கு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி.

சிறிது காலத்திற்குமுன் பா. தாவுது சாஹிப் என்பவரால் வெளியிடப் பெற்ற "ஜவாஹிருல் புர்கான்" என்ற திருகுர்ஆனின் தமிழ் மொழிபெயர்ப்பையும், தப்ஸீரையும்பற்றி நமது தேசத்திற் பெருங்கிளற்சி யேற்பட்டு முடிவில் அது, நபிமார்களுடைய முஅஜீஸாத்துக்களை நிராகரித்து அவைகளைப்பற்றியும், ஈஸா அலைஹிஸ்ஸலாமுடைய ஹயாத்தைப் பற்றியும் நமது திருகுர்ஆனில் கூறப் பட்டவைகளுக்கு நேர்மாற்றமான அர்த்தங்களைப் பொறுத்தமற்ற விதத்திற் சிருட்டிக்கும் காதியானிகளின் கொள்கையை முற்றுந் தழுவி, அரபிக்கல்வி அறிவில்லாத ஒருவரால் எழுதப் பட்டதென்றும், 'சுன்னத்து ஜமாஅத்தின்' கொள்கைக்கு முற்றிலும் மாற்றமான தென்றும் உலமாக்களாற் றீர்மானிக்கப்பட் டிருக்கிறது.

அதன் பின்னர், திரு குர்ஆனின் மொழி பெயர்ப்பாகிய இம்மாப்பெரும் வேலையைப் பொறுப்பு வாய்ந்த உலமாக்களின் அபிப்பிராயத்தின் மேற்றான் செய்யவேண்டு மென்கிற நோக்கத்தின் பேரில் "இஸ்லாமிய நூற்பிரசுரச் சங்கம்" என்றொரு சபை, திருச்சியில் ஏற்பட்டு வேலைசெய்து வருவதைக் கேள்விப்பட்டு அது வெளி வருவதை எதிர்பார்த்திருந்தேன். ஆனால், அதற்கு இடையில் 'சுன்னத்து ஜமாஅத்து' கொள்கையை அனுசரித்து, பல தப்ஸீர்களின் ஆராய்ச்சியின் பேரில் "நுஸ்ரதுல் ஹமீது பீ தப்ஸீரி குர்ஆனில் மஜீது" என்னும் பெயர்கொண்ட திரு குர்ஆனின் ஒரு மொழி பெயர்ப்பு, ரவண சமுத்திரத்திலிருந்து மாத சஞ்சிகையைப் போல் வெளியிடப்பட்டு வருவதாகவுங் கேள்விப்பட்டு, அதிக ஆவலோடும் அதைத் தருவித்துக் கண்ணுற்றேன்.

அம்மொழி பெயர்ப்பின் 38-வது பக்கம், 46வது இலக்கத்தின் கீழ் "மூமினான ஆன்மா காபிரான ஆன்மாவில் நின்றும் யாதொரு வஸ்துவையும் தேள்வைப்படாதே, அந்நாளாகிய இறுதி நாளைக்

...டபுட்டு ... காலேஜ்

கொண்டு பயப்படுங்கள்'' என்று எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால், நமது திரு குர்ஆனிலோ ''யாதொரு ஆன்மா'' என்று பொது வாகக் கூறப்பட்டிருக்கின்றதே தவிர, ரவண சமுத்திரக்காரர் எழுதிய பிரகாரம் காபிரான ஆன்மா, மூமினான ஆன்மா என்ற பாகு பாட்டைக்காணோம். அவ்விதம் பொதுவாக உள்ள ஒரு விஷயத்தை இவ்விதம் பிரிப்பதால் திரு குர்ஆனின் கருத்தில் ஏற்படக்கூடிய மாறுதலைத் தாங்கள் கவனிக்கவும்.

தவிர, ஷை மொழிபெயர்ப்பில் 39-வது பக்கம், 50-வது, இலக்கத்தின் கீழ் ''பின்பு நீங்கள் காளைமாட்டை தெய்வமாக்கிக் கொண்ட பிறகு, நாம் உங்களைத் தொட்டும் பாவத்தைப் பொறுத்தோம்'' என்று எழுதப்பட்டிருக்கிறது. திரு குர்ஆனில் எவ்விடத்திலாகிலும் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றதா? இது இஸ்லாமியக் கொள்கைக்கு முற்றிலும் மாற்றமானதல்லவா?

மேலும், ஷை ரவணசமுத்திரக்காரர் முதலாவதாக வெளியிட்டிருக்கும் நூற்று இருபத்திரண்டு வசனங்களின் மொழிபெயர்ப்பில் மாத்திரம் இவ்வாறே அநேக விஷயங்கள், நமது திருகுர்ஆனின் கருத்துக்கு மாற்றமாகத் தெரிகின்றன. எனது சிற்றறிவிற் கெட்டியவைகளில் உதாரணமாக இருபத்தைந்து வசனங்கள் வரையிற் குறிப்பிட்டு, அதை தங்கள் சமுகம் அனுப்பியிருக்கின்றேன்.

இவ்விதமிருக்க ''மஜ்லிஸுல் உலமாவின்'' வாயிசாகிய மௌலவி ''அஹ்மது பாகவி'' என்ற பெயருடைய ஒருவர் அதைப் பார்வையிட்டு, அது சரியான மொழிபெயர்ப்பென்று நற்சாக்ஷிப் பத்திரங் கொடுத்திருப்பதாக ஷை தர்ஜுமாவின் தலைப்பிற் குறிப்பிடப் பட்டிருக்கின்றது.

ஆதலால், ஷை தப்ஸீர் ''மஜ்லிஸுல் உலமா'' சபையால் அங்கீகரிக்கப் பெற்றதா? இத்துடன் அனுப்பி யிருக்கும் ஷை மொழி பெயர்ப்பைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராய மென்ன? தயை செய்து, எனது இக்கடிதத்துடன் தங்களின் அபிப்பிராயாத்தையும், விடையையும் இஸ்லாமிய பத்திரிகையின் மூலமாகத் தெரிவிக்கும் படி வேண்டுகிறேன்.

இங்ஙனம் தங்கள்

குடந்தை,
25-12-26.

V. S. அப்துஸ்ஸலாம்.

விடை

தாங்கள் அனுப்பிவைத்த கடிதமும் ''நுஸ்ரதுல் ஹமீத்'' என்னும் குர்ஆன் மொழிபெயர்ப்பும் கிடைத்தன. அதிற்றாங்கள் குறிப்பிட்டவைகளைத் தவிர, வேறு தவறுகளையுங் கண்டேன்.

பிரசுரிப்பவர் அதன் முகப்பேட்டில் (டயிட்டில் பேஜில்) இஃது அவருடைய பாட்டனாரால் மொழிபெயர்க்கப் பட்டதென்று எழுதியிருக்கின்றார். ஆனால், இம்மொழி பெயர்ப்பைப் பார்ப்பது கொண்டு அவருடைய பாட்டனாராலும் சரிபார்த்துத் திருத்தப்படாத "மூஸ்வத்தா" (ரப்காப்பி) என்றும், இதைப் பிரசுரிப்பவராகிய எம். மக்தூம் ஸாஹிப் என்பவர் திருக்குர்ஆனை மொழிபெயர்க்கவோ, அல்லது மொழிபெயர்ப்பைச்சரி பார்த்துத் திருத்தவோ தகுதியற்றவரென்றுந் தெரிகிறது.

மிகப் பொருப்பு வாய்ந்த இவ்வேலையை இவர் செய்யமுன் வந்ததைப்பற்றி மிகவும் வருந்துகின்றேன். இம்மொழி பெயர்ப்புக்கும், "மஜ்லிஸுல் உலமா"வுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

இங்ஙனம்,

மஜ்லிஸுல் உலமா காரியதரிசி

சி. கா. செய்கு இப்ராஹீம்.

ரிஷி தயானந்தரின் தடுமாற்றம்.

(கொழும்பு. எம். ஹெச். மதார்சாஹிப் எழுதியது)

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்.

"அவர்கள் (அவிசுவாசிகள்) ஆண்டவனின் ஒளியை, தங்கள் வாயி (அசுத்தக் காற்றி)னால் அணைக்க நாடுகிறார்கள். ஆனால், அல்லா(ஹ்) அவனின் ஒளியை பூர்ணமாக்குகிறான். அவர்கள் (அவிசுவாசிகள்) எவ்வளவு பொருத்தங்கெட்ட போதிலுஞ் சரியே" (அல்குர்ஆன் 61:8)

ரிஷி தயானந்தரால் இயற்றப்பட்ட "சத்தியார்த்தப் பிரகாசம்," 14-வது அத்தியாயத்தில், எமது மாசற்ற தீனுல் இஸ்லாத்தை ஸ்வாமியார் வாய்கிழியத் தூற்றியுள்ளார். அவற்றிற்கு, எமது சத்திய சன்மார்க்கமாகிய இஸ்லாம் மார்க்க சட்டதிட்டங்களைக் கொண்டு விடையிறுக்கு முன், அவரது ஆபாச நூலைக்கொண்டே விடையிறுப்போமாக:—

மேற்சொன்ன நூலின், 14-வது அத்தியாயத்தின் முதல் பக்கத்தில் "பொறுத்தருள்பவனே! தயாபரனே!! ஆண்டவனே!!! (அல்லாவின் திருநாமத்தால் ஆரம்பஞ் செய்கிறேன்) என்று வரையப்

பட்ட குர்ஆனை, முஹம்மதியர் (முஸ்லிம்)கள் கடவுளின் அருள்மொழியெனக் கொள்கிறார்கள். மேற் கூறப்பட்டதிலிருந்து இந்நூலை ஆக்கியவர் கடவுள் அல்லவென்றும், ஒரு தனிமனிதன் என்றே புலனாகிறது. இந்நூல் கடவுளால் ஆக்கப்பட்டதெனின், அல்லா(ஹ்) வின்பேரால் இந்நூலை ஆக்குகிறேன் என்று சொல்லியிருக்க வேண்டியதில்லை. மனிதஜாதியின் நன்மையை ஒட்டியே இந்நூலை ஆக்குகிறேன் என்று சொல்லியிருக்கலாம். மனிதன் வாழ்க்கையில் எப்படி நடக்கவேண்டும்; எக்காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதைக் காட்டவே, இது செய்யப்பட்டது என்றால், மனிதன் கெட்ட காரியத்தை கடவுளின் பேரால் செய்து, அவருக்கு அவமதிப்பைவிளை வித்தல் கூடும்.

"மேலும், கடவுள் " தயாளு" யென்று துவக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது. தயாளுவாயின் ஜீவன்களைக் கொலை செய்து, வருத்துதலை எங்ஙனம் ஆமோதித்தல் கூடும்? ஜீவஹிம்சை கடவுளின் தயாளத்தன்மைக்குப் பங்கம் விளைப்பதாகுமன்றோ! கால் நடைகள் நிரபராதிகள் அல்லவா? அவை யாருக்குத் தீங்கு இழைத்துள்ளன? அவைகள் ஆகாராதியாகக் கொள்ளப் படுகின்றன. கால்நடைகளும் கடவுள் சிருஷ்டியில் உட்பட்டவைகள் அல்லவா? கடவுள் குர்ஆனைச் செய்திருப்பின், அவர் மனிதனைக் கெட்டகாரியஞ் செய்யும்படி ஒரு நாளும் கூறியிருக்கார். எனவே, துவர்க்கத்தில் கூறப்பட்ட வாசகம் பொருளற்றதாக விருக்கிறது. கொலை, களவு, வியபிசாரம், பொய் ஆகியவைகளைக் கடவுள்பேரால் செய்யலாமா? என்று கேட்கிறோம். கொலைக்காரர்கள் கால்நடைகளைக் கொலை செய்கையில், "பிஸ்மில்லாஹி" என்கின்றனர். இதிலிருந்து விளங்குவதென்னை? இஸ்லாம் மதத்தினர் மேற்கூறிய கொடுந்தொழிலைக் கடவுளின் பெயரால் செய்கிறார்கள். ஆகவே, இஸ்லாம் மதக்கடவுளைத் தயாளு, கருணாநிதி யென்று அழைத்தல் முடியாது. ஏனெனில், அவர்கள் பிராணிகளிடம் கருணைகாட்டவில்லை." என்று ஸ்வாமியார் வரைந்திருக்கிறார்.

ஸ்வாமியவர்கள் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் முதலிய நான்கு வேதங்களும் தேவவாக்கென்கின்றார். இதோ யஜுர்வேதம் (20 : 9) ல் "ஓ அக்கினியே! (அதாவது ஒளியின் ரூபியான ஈசுவரனே!) என்பால் உனது கருணையைச் செலுத்துவாயாக! உனது பேரொளியைத்தந்து, என்னை பிரகாசிக்க செய்வாய்....................,"

இன்னும், யஜுர்வேதம் (34 : 6) ல் ஞானிக்கு ஞானியான ஏ பரம்பொருளே! வண்டிச்சக்கரம் போல், ரிக், யஜுர், சாம, அதர்வணம் ஆகிய வேதங்களுக்கு மூலாதாரமாயும், எங்கும் பரவியுள்ள உன்னை

அறிவதற்குப் பாத்திரமாயும் இருக்கும், உனது அருளைப்பெற்ற எனது மனம்...................என்றும், இன்னும், ரிக்வேதம் முதல் மந்திரத்திலும், யஜுர், 15 : 54, 20: 50, 21: 18, 32: 14, ரிக் 6: 1, 6: 5, அதர்வணவேதம் 6: 10, 68; 1, லும் வருகின்றன.

சகோதரர்களே! இத்தகைய பிரார்த்தனை நிறைந்த புத்தகத்தையும் தேவ வாக்கென்று சொல்லலாமா? இதில் கடவுள் அடியாரிடம் விண்ணப்பிப்பது போன்ற வாக்கியங்கள் காணப் படுகின்றனவா? அல்லது அடியார்கள் ஆண்டவனிடம் விண்ணப்பம் செய்வதுபோ லிருக்கின்றதா? ஸ்வாமியாரின் (காமாலைக்) கண்ணுக்கு எங்ஙனம் வேதவாக்கியத்தின் போக்கு விளங்கப்போகின்றது! வேதங்களில் கடவுள் சிலசமயம் நேரில் பேசுவது போலும், சிலசமயம் வேறொருவருக்கு அறிவித்து அடியார்களுக்கு சொல்லும்படி ஏவியும், பிரார்த்தனை சம்பந்தமாக அறிவிக்கும்போழ்து, அடியார்கள் ஆண்டவனிடம் விண்ணப்பிக்கும் பான்மையாகவுமே வேதவாக்கியங்கள் இருக்கின்றன. மேலும், "குர்ஆன் ஷரீபில் எந்த இடத்திலாவது பாவமான கருமங்களை ஆண்டவனுடைய நாமத்தைக் கொண்டு ஆரம்பிக்கும்படி சொல்லப்படவில்லை." அப்படியல்லவென்று ஸ்வாமிஜீயின் சிஷ்யர்களாவது என்பிப்பார்களா?

எம்பரிசுத்த இஸ்லாம் மதத்தில் ஜீவவதை செய்யும்படி ஏவப்பட்டிருப்பதால் "முஸ்லிம்களின் கடவுள் தயாள குணமுடையவரல்ல" வென்றும் ஸ்வாமியார் தமது பொக்குவாயை மெல்லுகிறார். அவரால் இயற்றப்பட்ட உபதேசமஞ்சரி, 60-வது பக்கத்தில், "துஷ்டகிரிகைகளினிமித்தமே, ஆத்துமாக்கள் மிருகங்களின் சரீரத்தில் அடைக்கப்பட்டு, அவஸ்தை படுகின்றனவென்று, கனமிக்க ஸ்வாமிவரைந்துள்ளார். நிற்க, ஸ்வாமியாரவர்களால் தேவவாக்கென யொப்புக்கொள்ளப்பட்ட, நான்குவேதங்களிலுள்ள கீழ்க்கண்ட வாக்கியங்களைத் தமது காமாலைக்கண்ணுக்கு கண்ணாடிபோட்டு, வாசித்திருப்பாராயின், தமது சிஷ்யர் (ஆரியசமாஜி) களை பிரதிதினமும் நாலைந்து மிருகங்களைக் கொல்வதற்குப் பதிலாக, நாலைந்து சுண்டெலிகளையேனும் கொல்லும்படி ஏவியிருப்பார். ஸ்வாமி என்செய்வார்! பாவம்!! ஜீவவதையைப்பற்றி கூறியிருக்கும் (தமது) வேதவாக்கியத்தின் பாகத்தை வாசிக்கும்போது, தமது மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கீழேவைத்து விட்டார்போலும்! எனவே, ஹிந்து வேதத்தில்:—

1. "பசுவின் மாமிசம் எல்லாவற்றையும்விட நேர்த்தியான ஆகாரமாயிருக்கிறது". (ருக்வேதம் மண்டலம், 6, சோகத் 1: 6.)

Musalman. Vol. 1. No. 2. Page 4.

2. "மழையை அழைக்கிற தவளை, வசந்தகாலத்தின் எலி, பெரிய பாம்பு, புரு, ஆந்தை,. முயல், காட்டெருமைக் கடா ஆகியவைகளை வர்ண தேவனுக்காகப் பலியிடலாம்" (யஜுர் வேதம், அத் : 24. மந்திரம் 28. தயானந்தரின் மொழிப்பெயர்பு, (—do Vol: 1.).

3. "விலைக்கு வாங்கப்பட்ட, அல்லது பிறரால் கொண்டுவரப் பட்ட மாமிசத்தை தேவர்கள். பிதுர்க்களுக்கு காணிக்கை செய்து, அருந்துவதினால் பாவமுண்டாவதில்லை." (மனுஸ்மிர்தி. அத் :5. மந்திரம் 32.)

4. மது, மாமிசம் இவ்விரண்டையும் அருந்துவதினால் யாதும் தோஷமில்லை. எந்த மாமிசத்தை சுத்தி செய்யப்படவில்லையோ, அதை பிராமணன் புசிக்கக்கூடாது. சாஸ்திரப்படி மந்திரத்தினால் சுத்தி செய்யப்பட்ட மாமிசத்தை புசிக்கலாம்." (மனு: அத் 5, 36.)

5. "சாஸ்திரத்தின் மூலமாக சுத்தி செய்யப்பட்ட மாமிசத்தை புசியாதவன் பரலோகத்தில், இருப்பத்தோர் ஜென்மம் வரை மிருகமாயிருக்கிறான்." இன்னும், "பிர்மா எல்லா உயரினங்களையும் பலியிடுதற்காக சிருஷ்டித்திருக்கிறார். எந்த ஜீவவர்க்கம் எக்கியத்தில் (குர்பானி) செய்யப்படுகிறதோ, அவைகள் நேராக சுவனலோகஞ் சேர்ந்து விடுகின்றன. அந்த குர்பானி செய்யப்பட்ட உயிரினங்களின் மாமிசத்தைப் புசியாதவன், இருபத்தோர் ஜென்மம் நரகத்திற்குப் போகுறான்." (மனுஸ்மிர்தி. அத் . 5. ஸ்லோகம், 35 முதல் 40 வரை) Musalman Vol: 1.

எனதன்பார்ந்த ஆரியசகோதரர்களே! மாமிசம் புசிக்காத ஓர் ஹிந்து ஆரியன் இருபத்தோர் ஜன்மம் மிருகமாய்ப் பிறப்பது மல்லாமல், நகரவேதனையையும் அனுபவிக்கவும் வேண்டுமென நுமது வேதம் ஓல மிடுகின்றன. நுங்கள் ஸ்வாமியார் ஜீவவதை கூடாதென அட்டகாசம் செய்துள்ளார். "கூரையேரி இன்று கோழி பிடிக்கத் தெரியாத குருநாதனா? நாளை வானத்தைக்கிழித்து (ஆரியர்களுக்கு) வைகுண்டம் காட்டப்போகிறார்?" (தொடரும்)

குறிப்பு:—தயானந்தருக்கு ஈடேற்றமுண்டா? என்ற விஷயத்தைப்பற்றி அடுத்தப்பத்திரிகையில் எழுதப்படும் (இன்ஷா அல்லாஹ்)

மார்க்க ஊழியமும், ஸஹாபாக்களும்.

(10-வது பக்கத் தொடர்ச்சி)

அதி கௌரவம் வாய்ந்த ஸஹாபாக்களின் அழகிய நன் முயற்சியால், மேற்கூறப்பட்ட பற்பல கூட்டத்தினர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக் கொண்டனர். மேலும், அக்கூட்டத்தினர்களைத் தவிரவும், அநேகர்கள் மேன்மையான ஸஹாபாக்களின் பிரசாரத்தின் மூலமாய் இஸ்லாம் மார்க்கத்தை யடைந்தனர். ஹஜ்ரத் ஹா'ரிஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் புத்திரியாகிய உம்மு ஹகீம ரலியல்லாஹு அன்ஹா அவர்களை, அபூஜஹலின் மகன் இக்ரிமாவுக்கு விவாகம் செய்யப்பட்டிருந்தது. திருமக்கமா நகரம் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கைவசமாக்கப்பட்ட தினம், ஹஜ்ரத் உம்மு ஹகீம அவர்கள் இஸ்லாமில் சேர்ந்தார். ஆனால், அவரின் கணவர் எமன் தேசத்திற்கு ஓடிப் போயினர். ஆகவே, ஹஜ்ரத் உம்மு ஹகீம ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் எமன் தேசத்திற்குப் பிரயாணமாகிப்போய், தன் கணவரை இஸ்லாத்தில் சேர்ந்து கொள்ளும்படியாய் அழைத்தார்கள். அவரும் இஸ்லாமாகிவிட்டார். ஆகவே, கணவரும், மனைவியுமாக நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகமடைந்தனர். அவர்களைக் கண்டதும் ஹஜ்ரத் அவர்களின் பரிசுத்த சரீரம் சந்தோஷத்தினால் துளிம்பிற்று. அதனால், நாயகம் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பரிசுத்த சரீரத்தில் போர்த்திருந்த சால்வைக் கீழே விழுந்து விட்டது. அந்நிலைமையில் தாங்கள் அவ்விருவர்களிடத்திலும் "பைஅத்"—விசுவாசப் பிரமாணம் வாங்கிக் கொண்டார்கள்.

ஹஜ்ரத் அபூதல்ஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹஜ்ரத் உம்மு ஸலீம ரலியல்லாஹு அன்ஹா அவர்களை விவாகஞ்செய்து கொள்ள நாடினார்கள். ஆனால், ஹஜ்ரத் உம்மு ஸலீம அவர்கள் "நீர் காபராக விருக்கின்றீர். நான் முஸ்லிமாக விருக்கிறேன். ஆகவே, நம்மிருவர்களுக்கிடையில் எவ்விதம் விவாகம் செய்யக்கூடும்? ஆனால், நீர் இஸ்லாமைத் தழுவிக்கொள்ளும். நீர் அவ்விதம் இஸ்லாமைத் தழுவிக் கொள்ளுவதை என்னுடைய மகராகவொப்புக் கொள்ளுகிறேன்.

அதையன்றி வேறு எதையும் உம்மிட மிருந்து மகராக நான் விரும்ப மாட்டேன்" எனக்கூறினார்கள். அதுபோலவே, அவரும் இஸ்லாம் மார்க்கத்திலானார். ஹஜ்ரத் உம்மு ஸலீம அவர்கள் கேட்டுக் கொண்டதன்படியே, ஹஜ்ரத் அபூதல்ஹா அவர்கள் இஸ்லாமானதே மகராகவேற்பட்டது (அஸதுல் காபா)

ஹஜ்ரத் ஜப்பார் ஸல்மீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் காபராகவிருந்த காலத்தில் "பீர் மஊனா"வின் ஷுஹதாக்களில் ஒரு காரீ-குர்ஆன்ஷரீபை நன்றாய் ஓதக்கூடியவரை ஈட்டியால் குத்திவிட்டார். அப்போழ்து அக்காரீயவர்கள் படு காயமடைந்தபோதும், அதி குணபாட்டுடைய தொனியோடு "அல்லாஹுத ஆலாவின் சத்தியம், நான் ஜெயம்பெற்றேன்" என்று மொழிந்தார்கள். இதைக்கேட்டு, ஹஜ்ரத் ஜப்பார் அவர்கள் "நாம் அவரைக் கொலைசெய்து விட்டோம். அவ்விதமிருக்கும் நிலைமையில் எவ்விதம் அவர்ஜெயமடைந்தார் என ஆச்சரியமுற்றார்கள். ஆனால், "சிறப்பான ஸஹாபாக்கள் தாங்கள் ஷஹீதாகிப் போவதையே ஜெயமென்று எண்ணுகிறார்கள்" என்று பின்பு அவர்களுக்குத் தெரியவந்தது. உடனே அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தையடைந்தார்கள். (அஸதுல் காபா)

ஹஜ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பரிசுத்த இஸ்லாம் மதத்தினால் குணப்பட்டிருந்தார்கள். ஆனால், அவர்களின் தாயாரவர்கள் காபராகவிருந்தார். ஆகவே, அவர்கள் தங்கள் தாயாரவர்களை இஸ்லாம் மார்க்கத்தில் சேரும்படியாய் நற்போதனை செய்து கொண்டிருந்தார்கள். இவ்விதம் இருக்கும் நிலைமையில், ஓர்நாள் இஸ்லாமைப்பற்றிப் பேசிக்கும் போழ்து, அவர்களின் தாயார் நாயகம் ரஸூலுல்கரீம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் துற்பாஷைக் கொண்டுக் கெடுதிச் சொன்னார்கள். இதைக்கேட்ட ஹஜ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், சகிக்க முடியாத்துயரத்துடன் கண்ணீர் வடித்தவர்களாக, நாயகம் அவர்கள் திருச்சமுகமடைந்து, "என் தாயார் நேர்வழியடையும்படி, அல்லாஹுத ஆலாவிடத்தில் தாங்கள் துஆச் செய்யுங்கள்" என்று மொழிந்தார்கள். அஃதேபோல் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், "ஓ அல்லாஹுத ஆலாவே! அபூஹுரைராவின் தாயாருக்கு நேர்வழியை யளித்தருள்" என துஆக்கேட்டார்கள். பின்பு,அபூஹுரைரா அவர்கள் தங்கள் இல்லத்திற்குச் சென்றார்கள். வீட்டையணுகியபோழ்து, தலைவாயல் அடைக்கப்பட்டதாகவும், உள்ளில் தண்ணீர்கொட்டுவதின் சப்தத்தையும் பெற்றார்கள். இதற்கிடையில் கால்ரவங்கேட்டு, அவர்களின் தாயார்

"ஓ அபூஹுரைரா! அவ்விடமே சற்று தாமதஞ்செய்யுமெ"னக் கூறி ஞர். உடனே ஸ்நானம்செய்து, துய்யவுடையுடுத்தி, தலைவாயலைத் திறந்தவராக "கலிமா தௌஹீதை" யோதினர். ஹஜ்ரத் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இதைக்கேட்டு, அடக்க முடியா பூரிப்படைந்து, நாயகம் அவர்களின் சந்நிதானம் சென்று, "தங்களின் துஆவை அல்லாஹுதஆலா ஒப்புக்கொண்டு விட்டான்" என மொழிந்தார்கள் (முஸ்லிம்-கிதாபுல் பலாயில்)

பனூதமீம் வகுப்பாரின் பிரதிநிதிக் கூட்டம் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமுகமடைந்த போழ்து, நாயகம் அவர்கள்அப்பிரதிநிதிக் கூட்டத்தினர்களைநோக்கி' " தாங்கள் விஜயஞ்செய்திருப்பதன் நோக்கமென்ன? என வினவினர் கள். அதற்கு அப்பிரதிநிதிக் கூட்டத்தினர் கூறியதாவது :—நாங்கள் தங்களைப் (முஸ்லிமாகியிருப்போர்களைப்) பார்க்கினும் சங்கை வாய்ந்தவர்கள் என்பதைத் தர்க்கத்தின் மூலமாய் தீர்மானஞ் செய்வதற்காக, எங்களோடு ஓர்புலவரையும்,ஓர் பிரசங்கியையும்அழைத்து வந்திருக்கிறோம் என்றனர். நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "நாங்கள் புலமைத்தன்மைக்காவும், கௌரவம் பாராட்டுவதற்காகவும் அனுப்பப்படவில்லை. ஆனல், வாருங்கள் கௌரவத்தை ஸ்தாபியுங்கள்" எனக்கூறினர்கள்.

ஆகவே, பனூதமீம் வகுப்பின் பிரதிநிதிக் கூட்டத்திலுள்ள அக்ரஅபின் ஹாபஸ் என்ற அங்கத்தினர், ஓர் வாலிபரை பிரசங்கம் செய்யும்படியாய் உத்திரவு கொடுத்தார். உடனே அவ்வாலிபர் சபையின் கண் எழுந்து "தங்கள் வகுப்பின் மேன்மைகளை யெண்ணி எண்ணிப் பிரசங்கம் செய்தார். ஹஜ்ரத் ஸாபித் பின் கைஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நாயகம் அவர்களுடைய பிரசங்கியாகவிருந்தார். அவரை பனூதமீம் பிரதிநிதியின் பிரசங்கிக்கு விடையிறுக்கும்படியாய், நாயகம் அவர்கள் கூறினர்கள். இதன் பின்பு பனூதமீம் பிரதிநிதிக் கூட்டத்தின் அங்கத்தினர் ஸுபர்கான் பின் பதர் என்பவர், ஓர் வாலிபரைத் தங்கள் சமூகத்தின் புகழைப் பற்றி கவி பாடும் படியாய் உத்திரவுசெய்தார். நாயகம் அவர்கள் ஹஸ்ஸான் பின் ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களை பிரதிநிதிக் கூட்டத்தின் புலவருக்கு விடையிறுக்கும் படியாய் ஆக்ஞாபித்தார்கள். ஆகவே, அவர் ஓர் கஸீதா-பாட்டில் அன்ஸார்களின் இஸ்லாமிய ஊழியங்களை யெண்ணி எண்ணிப் பாடினர்கள். இவ்விதம் நடந்துகொண்டு முடிவடையாமல் இருக்கும் ஸ்திதியில், பிரதிநிதிக் கூட்டத்தின் ஓர் அங்கத்தினர் நாயகம் அவர்களிடம் "யாரஸூலல்லாஹ்! என்னு

டைய நோக்கம் அவையாவற்றையும்விட, தனிமையாக விருக்கிறது. ஆகவே, ஓர் இரண்டடிப் பாட்டைப் பாடுகிறேன். சற்று கவனித்துக் கேட்பீர்களாக" என கேட்டுக்கொண்டார். அதன்படி ஹஜ்ரத் ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்கள் தாங்கள் பாடுவதை நிறுத்திக் கொண்டார்கள். பிரதிநிதியின் அங்கத்தினர் "அக்ரஅ" என்பவர் தன் பாட்டையாரம்பித்து, முஸ்லிம்களை எதிர்மொழியாக்கி "உங்கள் சமூகம் எங்கள் வேலையாட்களாகவிருந்தது. உங்கள் பெண்கள் எங்களுக்கு தாயாவாகவும், உங்கள் ஆண்கள் எங்கள் அடிமைகளாகவுமிருந்தனர்" என்னும் கருத்தடங்கிய இறுதிப்பாட்டுடன் பாடிமுடித்தார்.

நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் ஓ பனூதாரமி (பிரதிநிதிக்கூட்டத்தின் அங்கத்தினர் அக்ரஅவென்பவரின் சமூகப்பெயர்) சகோதரரே! எல்லாரும் அதை மறந்திருக்கும் நிலைமையில் திரும்பவும் அதையெனக்கு புதிதாக ஞாபகமூட்டவேண்டிய அவசியமில்லை எனமொழிந்தார்கள். இது அவர்களுக்கு அதிக ஊக்கத்தை யளித்தது. அதன் பலனாகப் பல்தர்க்கங்கள் ஏற்பட்டு முடிவில், ஹஜ்ரத் ஹஸ்ஸான் அவர்கள் தாங்கள் பாடுவதையாரம்பித்தார்கள். இறுதியில் பிரதிநிதிக்கூடத்தின் அங்கத்தினர் அக்ர அவென்போர் தன் அங்கத்தினர்களை நோக்கி, நாயகம் அவர்களையும், முஸ்லிம்களையும் சுட்டிக்காட்டி, அவர்களின் புலவரும், பிரசங்கியும் நம்புலவர், பிரசங்கி ஆகியவர்களைப் பார்க்கினும் மேன்மை வாய்ந்தவர்கள் என ஏற்படுகிறது. இதன் ரகசியத்தை கடவுள்தான் மிக அறிந்தவர் எனகூறி, நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் சமூகம் நெருங்கி "கலிமா தௌஹிதை" யோதி முஸ்லிமாகிவிட்டார். (அஸதுல் காபா)

குலபாயெ ராஷிதீன்களுடைய காலத்தில் அதிவிசேஷமாய் இஸ்லாம் மார்க்கம் யுலகில் பரவிற்று. முதலாவது கலீபா ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத் ஆட்சியின் போழ்து, இராக்தேசத்தின் கபான் என்ற இடத்தில் கொள்ளைக் கூட்டத்தின் தலைவரும், பிரசித்திபெற்ற வீரரும்மாகவிருந்த ஸல்வீ பின் ஹாரிஸா ஷீபானீ என்பவர் தன் கூட்டத்தின் அநேகரோடு பரிசுத்த இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவிக்கொண்டனர். இத்தலைவர் இஸ்லாம் மதம் தழுவியபின், ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சமூகமடைந்து, "தாங்கள் என்னை என் சமூகத்தினர்களுக்கு படைத்தலைவனாக செய்து விடுங்கள். அதன் மூலமாய் ஈரான் தேசத்தில் (மற்றமார்க்கத்தை) யெதிர்க்கிறோம்" என்று கேட்டுக்

கொண்டார். ஆகவே, ஹஜ்ரத் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், அவரின் கூட்டத்தினருக்கு அவரைத் தலைவராக்கி யிருப்ப தாக ஓர் அதிகாரபத்திரம் அளித்தார்கள். இவ்வதிகாரப் பத்தி ரத்தை ஸல்னீபின் ஹாரிஸா ஷீபானீ பெற்றுக்கொண்டு, கபான் என்னும் தன்னூருக்குச் சென்று, தம்வகுப்பின் இஸ்லாமாகாத மற்ற வர்களையும் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்துக் கொள்ளும்படி பிரசா ரஞ்செய்தார். அதன் மூலமாய் அவரின் கூட்டத்தில் இஸ்லா மாகா திருந்த மற்றவர்கள் வெகு சந்தோஷத்துடன் இஸ்லாம் மார்க்கத் தைத் தழுவி முஸ்லிம்களாகிவிட்டார்கள். (புத்தூஹுல் பலதான் 250-வது பக்கம்)

இரண்டாவது கலீபா ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத் ஆட்சியின் காலத்தில் வெற்றியின் பேரில் வெற்றியேற்பட்டுக் கொண்டிருந்ததோடு, இஸ்லாம் அதி விரைவாய் அபிவிர்த்தியடைந்து கொண்டே யிருந்தது. காதிஸிய்யா யுத்தத் தில் ருஸ்த்தம் வெட்டுப்பட்டு இறந்தபோழ்து, அவருடன் தைலம் என்பவரின் அதிகாரத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அதி வீரத் தனமுள்ள 4,000 வீரர்கள் இருந்தனர். இன்னும் அவர்கள் குஸ் ரூபர்வேஜின் பட்டாளங்களுக்கு காப்புப் பட்டாளமாகவிருந்ததன் நிமித்தம், பலர் அதி யுயரிய பட்டங்களையும் பெற்றிருந்தனர். அவர்கள் எல்லோரும் இஸ்லாமாகி விட்டனர். அவர்கள் முஸ்லிம் களாகியபின், மதாயின், ஜலூலாய் ஆகிய விடங்களின் யுத்தங்க ளில் அதிவிஷேச வீரத்தைக் காட்டினார்கள் * காதிஸிய்யாவின் யுத் தத்தில் லன்ஹம், முஸ்லிம், ராபிஅ, இஷ்தக் ஆகியவர்கள் தங்கள் நேசர்களுடன் முஸ்லிம்களாயினார்கள். இவர்களின் யோசனையின் படியே முஸ்லிம்கள் எதிரிகளின் யுத்தயானைகளைக் கைப்பற்றிக் கொண்டனர். (திப்ரீ 232-வது பக்கம்.) இஸ்பிஹானுடைய யுத்தத் திற்குபின் "ஜே" என்னுமிடம் ஜெயிக்கப் பட்டபோழ்து, தங்கள் தங்கள் கோட்டைகளில் ஒளித்திருந்த, அதன் சுற்றுப்பக்கத்துத் தலைவர்கள் எல்லோரும் இஸ்லாமானார்கள். கஜ்வீன் பேரில் யுத்தா ரம்பமாயினபோழ்து, அவ்விடம் குடியேறி யிருந்த தைலம் வகுப் பினர் அடங்கலும் முஸ்லிம்களாயினர். (புத்தூஹுல் பலதான்)

* புத்தூஹுல் பலதான் 289-வது பக்கம். திப்ரீ 261-வது பக்கத்தில் எழுதப்பட்டிருப்பதாவது:—அவர்களிற் சிலர் யுத்தத்திற்கு முன்னும், சிலர் பின்பும் இஸ்லாமாகி யுத்தத்தில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு வெற்றிப் பொருளிலிருந்து வீதமும் அளிக்கப்பட்டது. அவர்களில் ஒவ்வொருவருக்கும் 2,000 வீதம் சம்பளமும் கொடுக்க ஏற்பாடுஞ் செய்யப்பட்டிருந்தது.

யுத்தப்பட்டாளங்கள் விடுதி விடுவதற்குமுன், விடுதிவிடத்தக்க இடத்தை நிர்மாணிப்பதற்காகச் செல்லும் அநேக ஹபஷீ—கருப்பர் வாகனவீரர்களுக்கு எஜ்தகிர்த் என்பவர் ஓர் பெரிய அதிகாரியாகவிருந்தார். அவர் இஸ்பிஹானுக்குச் சென்றபோழ்து, ஹபஷிகளை 70 தலைவர்களுள்ள 300 வாகனவீரர்களுடன் சேர்த்து "அஸ்தகர்" என்னும் இடத்திற்கு அனுப்பினர். இன்னம், அவர்கள் போகும் வழிகளிலுள்ள ஒவ்வொரு பட்டினங்களிலிருந்தும் சிப்பாய்களைத் தெரிந்தெடுத்து, தங்களோடு அழைத்துச் செல்லும்படியாய் அவர்களுக்கு உத்திரவிட்டார். இவர்கள் "அஸ்தகர்" போய்சேர்ந்தபோழ்து, ஹஜ்ரத் அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் "ஸோஸன்" என்னுமிடத்தை முற்றுகை விட்டிருப்பதாய் தெரிய வந்தது. ஆகவே, எஜ்தகிர்த் ஹபஷிப்பட்டாளத்தை ஸோஸனுக்கு அனுப்பினர். ஆனல், அவ்வூர் முஸ்லிம்களாற் பிடிக்கப்பட்டுவிட்டது. அச்சமயம் ஹபஷிகள் தங்கள் பட்டாளத்திலுள்ள எல்லாத்தலைவர்களையும் ஒன்று கூட்டி கூறியதாவது:—"ஓ தலைவர்களே! இக்கூட்டத்தினர் (முஸ்லிம்கள்) நம் ராஜாங்கத்தின் பேரில் மிகைத்து விடுவார்கள். அவர்கள் அஸ்தகர் மஹால்களைத் தங்களின் குதிரைலாயமாக்கி விடுவார்கள் என்று நாம் முன்னமே மொழிந்திருக்கிறோம். ஆகவே, இப்போழ்தே நாம் அவர் (முஸ்லிம்)களின் மார்க்கத்தில் சேர்ந்துக் கொள்ளுவதுதான் மிக்க நன்மையையளிக்கக் கூடியது" என மொழிந்தார்கள். அதன்படியே எல்லோரும் சில நிபந்தனைகளின் பேரில் இஸ்லாமாகி விட்டனர். அவர்களில் ஸியா பஜா, ஐத், அந்தகார் ஆகிய இந்தியர்களு மிருந்தனர். ஜலூலாய் பிடிபட்டதன் பின்பு, அதன் சுற்றுப் பக்கங்களின் பெரிய பெரிய தலைவர்களாகிய ஜமீல் இபின் பஸ்பரீ, பஸதாம் பின்தர்ஸீ, ரபீல், பைரோஸ் ஆகியவர்களும் இஸ்லாமானார்கள்.

"தஸ்தர்" முற்றுகையிடப் பட்டபோழ்து, ஹுர்முஜான் கீழ்படிந்து விட்டார். அவரை ஹஜ்ரத் அபூமூஸா அஷ் அரீ (ரலி) அவர்கள், கலீபா ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சமுகத்திற்கு அனுப்பிவைத்தார்கள். அவ்விடம் சென்று, ஹுர்முஜான் இஸ்லாமாகி விட்டார். ஹஜ்ரத் அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் தஸ்தரிலிருந்து "ஜுந்தீஸாபூருக்குச் சென்றார்கள். அவ்விடத்திலுள்ள சிலர் கல்பானியாவிற்கு ஓடிப்போயினர். அவர்களைப் பின்தொடர்ந்து செல்லும்படி ரபீஅ பின் ஸியாத் அவர்களுக்கு, அபூமூஸா அஷ்அரீ (ரலி) அவர்கள் உத்திரவு கொடுத்தார்கள். ஆகவே, ரபீஅபின் ஸியாத் அவர்கள் ஓடிப்போனவர்களைத் துரத்திச் சென்று,

கல்பர்னியாவைப் பிடித்துக்கொண்டார்கள். அவ்விடத்தின் அஸாதா வென்பவர் ரபிஅ பின் ஸியாத் அவர்களிடம் அடைக்கலம் தேடினர். அவருக்கு அடைக்கலம் கொடுக்கப்பட்டதன்பின்புஅவ்விடத்திலுள்ள யாவரும் முஸ்லிம்களாகி விட்டனர். மேற்கூறப்பட்டவர்களன்றியும், அநேகர்கள் இஸ்லாமானர்களென்று சரித்திர மூலமாய் தெரியவருகி றது. தஸ்தர்யுத்தத்தில் பிறநாட்டார் ஒருவர் ஹஜரத் அபூமூஸா(ரலி) அவர்களிடம் பாதுகாப்புத் தேடினர். அவருக்குப் பாதுகாப்பளிக்கப் பட்டபோழ்து அவர் இஸ்லாமாகிவிட்டார். (புத்தூஹுல் பலதான்)

ரூமிகளுடன் சேர்ந்திருந்த ரோஸ்பாபின் புஸர்ஜ்மெஹர் பின் ஸாஸான் என்பவர் ஈரானிய பட்டாளத்தின் ஓர் அதிகாரியாகவிருந் தார். ஆனல், அவருக்கு ரூமியர்களிடம் நம்பிக்கையில்லை. இறுதி யில் ஹஜ்ரத் ஸஅத் பின் யாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர் கள், அவரின் எல்லா விஷயங்களையும், விஸ்தாரமாய் ஓர் லிகிதம் எழு தியவரிடம் கொடுத்து, அவரை ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் அனுப்பினர்கள். அவர் அவ்விடம் சென்று இஸ்லாமாகிவிட்டார். இன்னு மொருவர் ஹஜரத் உமர் (ரலி) அவர்களிடம் வந்து "நான் இஸ்லாமாகி விட்டேன். ஆகவே, என்பேரில் விதிக்கப்பட்ட வரியை மன்னித்து விடுங் கள்" எனக் கேட்டுக் கொண்டார். தமஸ்கஸ் பிடிப்பட்டபோ ழ்து அவ்விடமிருந்த "அதர்கோன்" என்னும் பாதிரியார் ஹஜ்ரத் காலித் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கரத்தில் இஸ்லாமாகி விட்டார். ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் பைத்துல் முகத்தஸில் பிரயா ணஞ்செய்யும்பொழுது ஹஜ்ரத் கஅப் அக்பார் அவர்கள் ஆஜராகி இஸ்லாமானர்கள். (தொடரும்)

நியாயம். ஒரு நாள் ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கடைவீதியிற் செல்லும்போழ்து, ஓர் மனிதன் ஒரு பெண்ணிடம் வார்த்தையாடு வதைக்கண்டு பயமுறுத்தினர்கள். அதற்கு அம்மனிதன் "யா அமீருல் மூமி னீன்! இவள் என் மனைவி" யென மொழிந்தான். ஆகவே, ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனைவிட்டு விட்டார்கள். பின்பு ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் பின் ஔபு (ரலி) அவர்களிடம் சென்று, தாங்கள் காரணமின்றி அம்மனித னின் சம்பாஷணையில் குறுக்கிட்டதைப்பற்றி மொழிந்து, துயரப்பட்டார்கள். அதற்கு, ஹஜ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் "தாங்கள் ஒழுக்கம் வருத் தினீர்கள். ஆகவே, அதில் தப்பேற்பட்டிருப்பினும் பாதகமில்லை" என மொழிந்தார்கள். ஆனல், ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மனச்சாந்தி யேற் படவில்லை. ஆகையால், அம்மனிதனிடம் சென்று, சாட்டையை அவர் கரத்தில் ஈந்து, "நான் காரணமின்றி உம்முடைய சம்பாஷணையில் தலையிட்டதற்கு ஈடு செய்துக்கொள்ளும்" என மொழிந்தார்கள். அதற்கு அம்மனிதன் "யா அமீ ருல் மூமினீன்! நான் உண்மையாக தப்பிதத்தில் இருந்தேன். தாங்கள் சரி யான சமயத்தில் கண்டித்தீர்கள்" என மொழிந்து, தன் குற்றத்தை மன்னிக் கும்படியாய் மிக வருந்திக் கேட்டுக்கொண்டார்.